பதினொராம் வகுப்பு இரண்டாம் தொகுதி
சு. சண்முகசுந்தரம் முதுகலை ஆசிரியர் பாரதியார் வித்யாலயம் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி
ஐந்து மதிப்பெண் வினா விடை
(குறைந்த பட்சம் 7 குறிப்புகள் எழுதினால் போதும்) (ஐந்து குறிப்பு ஐந்து மதிப்பெண்)
(புரிதலுக்காகவே அதிக குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது)

1. விஜய நகரப் பேரரசின் சமூக மற்றும் பொருளாதார நிலையை விவரி

    1. ஆளும் வர்க்கத்தினர் செல்வச் செழிப்புடனும் மக்கள் வறுமையிலும் இருந்தனர்.
    2. அடிமை முறை நிலவியது.
    3. வரி வருமானமே முக்கிய வருவாய். வரிகளை பணமாக செலுத்தினர்.
    4. நாயக்குகள் நெசவு போன்ற கைவினைத் தொழில் வளர வரிச் சலுகை வழங்கினர்.
    5. சமூகத்தில் கைவினைஞர்கள், நெசவுத் தொழில் செய்வோர், உலோக வேலை செய்வோர் கட்டட கலைஞர்கள் முக்கியத்துவம் பெற்றனர்.
    6. வணிக மையங்கள், நெசவு மையங்கள் உருவாகின.
    7. ஜவுளி முக்கிய ஏற்றுமதியாகும்.

2. விஜய நகர ஆட்சியாளர்களின் ஆட்சி முறை பற்றி விவரி

    1. அரசரே அனைத்து அதிகாரங்களையும் பெற்றவராவார்.
    2. முதலமைச்சர் மகாபிரதாணி என்றழைக்கப்பட்டார்.
    3. நாடு ராஜ்யமாக பிரிக்கப்பட்டது. பிரதானியின் கட்டுப்பாட்டில் இருந்தது. கணக்கர், இராணுவ அதிகாரிகள் பிரதானிக்கு உதவினர்.
    4. ராஜ்யம் சீமை, ஸ்தலம், கம்பனா வாக பிரிக்கப்பட்டது.
    5. கிராமம் மிகச் சிறிய அலகாகும்
    6. தமிழகத்தில் சந்திரகிரி, படைவீடு வலுத்தம்பட்டு, திருச்சிராப்பள்ளி, திருவாவூர் ஆகிய ஐந்து ராஜ்யங்கள் இருந்தன.
    7. நாயக்முறை அறிமுகமான போது ராஜ்யங்கள் முக்கியத்துவம் இழந்தன.

இத்துடன் 3 மதிப்பெண் வினாவில் (வினா எண் 2) உள்ள நாயக் முறைக்கான பதிலை சேர்த்து எழுதவும்.

3. முதலாம் முகமது ஆட்சியின் கீழ் பாமினி அரசு பற்றிக் குறிப்பு வரைக.

    1. பாமன் ஷாவிற்கு பின் ஆட்சிக்கு வந்த பாமினி அரசர்.
    2. சிறந்த அரசு முறை நிர்வாகத்தை நடத்தினார்.
    3. மராட்டியர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தார்.
    4. எட்டு அமைச்சர்கள் கொண்ட குழுவை எற்படுத்தினார்
    5. வழிப்பறி கொள்ளையர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தார்.
    6. நிறுவன மற்றும் புவியியல் ரீதியாக அரசை ஒருங்கிணைத்தார்.
    7. குல்பர்காவில் இரு மசூதிகளை கட்டினார்.

4. முகமது கவானின் ஆட்சி முறை மற்றும் ராணுவ நிர்வாகம் பற்றி விவரி

    1. பாமினி அரசர் மூன்றாம் முகமதுவின் அமைச்சர்.
    2. பீடாரில் ஒரு மதரசாவை நிறுவினார். அதில் ஒரு நூலகத்தையும் நிறுவினார்.
    3. பாரசீக வல்லுநர்களின் உதவியுடன் வெடிமருந்தை பயன்படுத்தினார்.
    4. நாட்டை எட்டு மாகாணங்களாக பிரித்தார். ஆளுநர்களை நியமித்தார்.
    5. ஆளுநர்களின் ராணுவ அதிகாரங்களை குறைத்தார். ஒருவருக்கு ஒரு கோட்டையே அனுமதிக்கப்பட்டது.
    6. மற்ற கோட்டைகள் சுல்தானின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.
    7. மாகாண தலைவர்களின் அதிகாரங்களை குறைத்தார்.



www.Padasalai.Net

5. சுபியிஸத்தின் தாக்கம் பற்றி விவரி

1. சூபியிஸம் சமூக அரசியல் பண்பாட்டுத் தளங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது.
2. மதச் சம்பிரதாயம், பழமைவாதத்தை எதிர்த்தது.
3. நகர் மற்றும் கிராமங்களில் பரவியது.
4. புதிய உலக ஒழுங்கை உருவாக்கியது.
5. அமைதியையும் மகிழ்ச்சியையும் நிலைநாட்ட பாடுபட்டது.
6. இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு வழிவகுத்தது.
7. இந்து-முஸ்லீம் இடையே சகோதரத்துவத்தையும் ஐக்கியத்தையும் எற்படுத்தியது.

6. பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக

1. ஒரு கடவுள் கொள்கை
2. பக்தி மூலம் முக்தி அடைய முடியும் எனும் கருத்தை முன் வைத்தனர்.
3. அர்பணிப்பே இறைவனின் அருளை பெற வழி என்றனர்.
4. குருவே வழிகாட்டி, ஆசிரியர் என்றனர்.
5. உலக சகோதரத்துவ கொள்கையை போதித்தனர்.
6. உருவ வழிபாட்டை விமர்சனம் செய்தனர். ஆழ்ந்த பக்தியுடன் பாடல்கள் பாடினர்.
7. சாதி முறையை விமர்சனம் செய்தனர். அனைத்து உயிரினங்களும் கடவுளின் குழந்தை என்றனர்.

7. "*வருவாய்நிர்வாகத்தில் ஷெர்ஷாஅக்பரது முன்னோடி*" – விளக்குக.

1. நெகிழ்வுத் தன்மை கொண்ட வருவாய் முறையை பின்பற்றினார்.
2. நிலங்கள் அளக்கப்பட்டு வளத்திற்கு ஏற்றவாறு வரி நிர்ணயம் செய்யப்பட்டது.
3. சில பகுதிகளில் ஜாகீர்தாரி முறையும், ஜமீன் தாரி முறையும் செயல்பட்டன.
4. சில பகுதிகளில் விளைச்சலில் ஒரு குறிப்பிட்ட பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது.
6. வணிகத்தை ஊக்குவிப்பதற்க்காக வணிக வரிகளை எளிமைப்படுத்தினார். நுழைவு வரி, விற்பனை வரி மட்டுமே வசூலிக்கப்பட்டது.
7. வணிகர்கள் தங்க சராய் எனப்பட்ட சத்திரங்கள் அமைக்கப்பட்டன.
8. மிகவும் புகழப்படும் அக்பரின் நிதி நிர்வாக முறை பெருமளவில் ஷெர்ஷாவின் முறையினை அடித்தளமாக கொண்டதாகும்.

8. அக்பரின் மதக்கொள்கை எவ்வாறு ஔரங்கசீப்பின் மதக்கொள்கையிலிருந்து மாறுபட்டிருந்தது?

| | அக்பர் | | ஔரங்கசீப் |
|---|---|---|---|
| 1 | ஓர் இணக்கமாக போக்கை மேற் கொண்டார் | 1 | இணக்கமான போக்கை மேற்கொள்விலலை. |
| 2 | அக்பர் அனைவருக்கும் அமைதி என்னும் தத்துவத்தை பரப்புரை செய்தார். சம கால வரலாற்று அறிஞரான பதானி அக்பர் இஸ்லாமை புறக்கணித்தார் எனக் குற்றம் சாட்டினார். | 2 | ஒரு உண்மையான முஸ்லீமாக நடந்து கொண்டார். அக்பரைப் போலல்லாமல் இஸ்லாத்தை முழுமையாக கடைபிடித்தார். |
| 3 | அக்பர் தன்னுடைய தத்துவத்தை விளக்க "தீன் இலாகி" யை தோற்றுவித்தார். | 3 | புதிய மதப்பிரிவை ஆரம்பிக்கவில்லை. மாறாக இஸ்லாம்மை தீவரமாக பின்பற்றினார். |
| 4 | அக்பர் மதச் சார்பற்ற அரசு உருவாக்குவதில் நம்பிக்கை கொண்டிருந்தார். | 4 | மதச் சார்பற்ற கொள்கையில் நம்பிக்கையில்லை |
| 5 | சமய சகிப்பு தன்மையுடன் நடந்து கொண்டார். ஜசியா வரியை நீக்கினார். | 5 | ஷரியத் சட்டத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார். ஜசியா வரியை மீண்டும் விதித்தார் |
| 6 | தனது இந்து மனைவியர் கோவிலுக்கு செல்வதை தடுக்கவில்லை | 6 | கோவில்கள் தொடர்பான அவருடைய சட்டங்கள் மிகப் பழமையானவை |

| | | | |
|---|---|---|---|
| 7 | புதிய இந்து கோவில்கள் கட்டப்படுவதை எதிர்க்கவில்லை. | 7 | புதிய இந்து கோவில்கள் கட்டக்கூடாதென ஆணைகள் பிறப்பித்தார். |

**9. ஔரங்கசீப்பின் தக்காண கொள்கை எவ்வாறு முகலயப் பேரரசின் அழிவுக்கு வழி வகுத்தது?**

1. தக்காண படையெடுப்புகள் முகாலய கருவூலத்தை காலி செய்தன
2. தக்காண விவகாரங்களில் ஔரங்கசீப் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது.
3. ஏனைய பகுதிகளில் தோன்றிய எதிர்ப்புகளை எதிர் கொள்ள விடாமல் அவரை தடுத்தது.
4. தக்காண ஷியா முஸ்லீம்களிடம் கடுமையாக நடந்து கொண்டது.
5. ஷியா அரசுகளான பிஜப்பூர், கோல்கொண்டாவை பகைத்துக் கொண்டது.
6. மராட்டியருடன் பகைத்து கொண்டு தனது நேரம் முழுவதையும் வீணடித்தார்.
7. தக்காண ஷியா அரசுகளை அழித்ததால் வளர்ந்து வந்த மராட்டியர்க்கு உதவியாக இருந்தது.

**10.** முகலாயர் ஆட்சியில் பொருளாதாரம், வணிகம் பற்றி ஆராய்க.

1. வேளாண்மையே பொருளாதாரத்தின் அடித்தளமாக இருந்தது.
2. வங்காளம் தலைமைப் பட்டு உற்பத்தி மையமாயிற்று.
3. நிலங்கள் அளக்கப்பட்டு வரிகள் அறிமுகம் செய்யப்பட்டது (தோடர்மால் அறிமுகம் செய்தது)
4. கர்கானா என்ற தொழிற்கூடங்கள் இருந்தன.
5. உண்டி எனப்பட்ட கடன் பத்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.
6. சராய்கள் என்ற ஓய்வு விடுதிகள் வணிகர்களின் பயணங்களை ஊக்குவித்தன.
7. சோழ மண்டலக் கடற்கரை பருத்தி துணி உற்பத்திக்கு புகழ் பெற்றிருந்தது.
8. ஏற்றுமதி செய்த பொருட்களுக்கு மாற்றாக தங்கத்தையும் வெள்ளியையும் இறக்குமதி செய்தனர்.

www.Padasalai.Net

**11.** முகலாயக் கட்டடக் கலையின் சிறப்பம்சங்கள்:

முகலாயர் கலையின் சிறப்பு:

1. கூண்டு வடிவிலான குமிழ்களைக் கொண்ட கவிகை மாடங்கள்
2. கலங்கரை விளக்கம் போன்ற கோபுரங்கள்
3. நான்கு மூலைகளிலும் எழுப்பப்பட்டுள்ள ஸ்தூபி மாடங்கள்
4. படங்கள் வரையப்பட்டு பதிக்கப்பட்ட ஓடுகள்
5. ஷெர்ஷா காலத்தில் தில்லியில் புராணகிலா, பீகாரில் சசாரம் கல்லறைகள் மிகச் சிறப்பானவை.
6. அக்பர் காலத்திய ஹுமாயூனின் கல்லறை, ஆக்ரா கோட்டை, புலந்தர் வாசா சிறப்பானதாகும்.
7. ஜஹாங்கீர், நூர்ஜகானின் தந்தைக்கு எழுப்பிய கல்லறை.
8. ஷாஜகானின் தாஜ்மஹால் அவரின் புகழை உச்சத்திற்கு கொண்டு சென்றது.
9. டெல்லி செங்கோட்டை இவரது கட்டடக்கலை திறனை எடுத்துக் காட்டுகின்றன.
10. ஆக்ரா கோட்டையில் உள்ள மோதி மசூதி, தில்லியில் உள்ள ஜும்மா மசூதி மிகச் சிறப்பானதாகும்.

*13. சிவாஜியின் இராணுவ அமைப்பு அவரது வெற்றிக்கு எவ்வாறு வழி வகுத்தது?*

1. சிவாஜியிடம் நிலையான இராணுவம் இருந்தது.
2. மரபுவழி நியமனம், ஜாகீர் வழங்குவதை விரும்பவில்லை திறமையான இளைஞர்களை தேர்ந்தெடுத்தார்.
3. படை வீரர்களுக்கு வீடு, ஊதியம் வழங்கப்பட்டது.
4. நான்கு வகைப் படைகள் இருந்தது (காலட்படை, குதிரைப்படை, யானைப்படை, ஆயுதப்படை)
5. கொரில்லா போர் முறையுடன் பாரம்பரிய போர் முறையிலும் பயிற்சி.
6. காலாட்படை ரெஜிமெண்டுகள், பிரிகேடுகள் என பிரிக்கப்பட்டது.
7. குதிரைப்படையும் தலைமைத்தளபதியின் கீழ் நன்கு கட்டமைக்கப்பட்டிருந்தது.

14 சிவாஜியின் நில வருவாய் முறையினைப் பேஷ்வாவின் நிலவருவாய் முறையோடு ஒப்பிடுக.

சிவாஜியின் வருவாய் நிர்வாகம்:

1. சிவாஜியின் வருவாய் நிர்வாகம் நியாயமானதாகவும் உற்பத்தியாளர்களுக்கு சாதகமாகவும் அமைந்திருந்தது.
2. நிலம் அளவீடு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டது. வரித்தொகை தெளிவாக நிர்ணயிக்கப்பட்டது.
3. பஞ்ச காலத்தில் அரசு உதவியது. விசாயிகளுக்கு கடன்கள் வழங்கப்பட்டன.

பேஷ்வா வருவாய் நிர்வாகம்:

1. நில வருவாய் முக்கிய வருவாயாகும்.
2. சிவாஜியின் ஆட்சியில் பின்பற்றப்பட்ட, விவசாய உற்பத்திப் பொருள்களைப் பகிர்ந்து கொள்ளும் நடைமுறையைப் பேஷ்வாக்கள் கைவிட்டனர்.
3. நில வரியை வசூலிக்க குத்தகை நடைமுறையை பின்பற்றினர்.
4. நிலத்தின் உற்பத்தித் திறன் சார்ந்து வரிகள் நிர்ணயம் செய்யப்பட்டன.

15 *முதலாம் பாஜிராவ்வாழ்க்கையையும் சாதனையையும் பற்றி விவாதிக்கவும்.*

1. முதலாம் பாஜிராவின் தந்தை பாலாஜி விஷ்வநாத் ஆவார். அவர் தான் மராட்டியத்தின் முதல் பேஷ்வா.
2. தந்தைக்கு பின் அவரை மன்னர் சாஹு பேஷ்வாவாக நியமித்தார்.
3. முதலாம் பாஜிராவ் ஹைதராபாத் நிஜாம், மால்வா ஆளுநர், குஜராத் ஆளுநர் ஆகியோரை வெற்றி கொணடு அரசை விரிவுபடுத்தினார்.
4. முகலாயரின் கட்டுப்பாட்ல் இருந்த பந்தல்கண்டை விடுவித்து அதன் ஆட்சியாளரிடமிருந்து மூன்றில் ஒரு பங்கை பெற்றார்.
5. பேஷ்வாவுக்கு அடிபணிய மறுத்த தலைமைத் தளபதி திரிம்பக்ராவ்வை தோற்கடித்து கொன்றார். தலைமை பதவியையும் தானே ஏற்றார்.
6. மன்னர் சாஹுவின் தலைமையை ஹோல்காபூரின் சாம்பாஜி ஏற்கும் படி செய்தார்.
7. கொங்கணக் கடற்கரையில் இருந்த போர்த்துகிஷியரை விரட்டி அவர்களிடமிருந்து தானே, சால்செட், பேசின் பகுதிகளை கைபற்றினார்.

16. பேஷவாக்கள் ஆட்சியின் வருவாயினங்கள் பற்றி எழுதுக.

1. நில வருவாய் தான் முக்கிய வருவாயாக இருந்தது.
2. காடுகளிலிருந்து வருவாய் கிடைத்தது.
3. சௌத் மற்றும் சர்தேஷ்முகி வரிகள்.
4. சுங்கம், கலால் வரி, வனப்பொருட்களின் விற்பனை.
5. வேறு வரிகள்: 1. நிலவரி, விட்டு வரி,எடைகற்கள் அளவைகள் சோதிப்பதற்கான வருட கட்டணம், விதவை மறுமண வரி, கால்நடைகள் மீதான வரி, மேய்ச்சல் வரி, நதிக்கரையோர பூசணி விவசாயத்துக்கான வரி, குதிரை விற்பனை வரி, வரி செலுத்துபவரின் ஒரு வருட வருமானத்துக்கான வரி.
6. நீதி பரிபாலனமும் வருவாயை ஈட்டித் தந்தது (பணப்பத்திர வரி, அபராதம் முதலியன)
7. சொந்த பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் வரி.

17. நவீனக் கல்வி முறைக்கு இரண்டாம் சரபோஜியின் பங்கினை விளக்குக.

1 தஞ்சாவூரில் கிறிஸ்தவர் அல்லாத உள்ளூர் குழந்தைகளுக்காக நவீன பொதுப் பள்ளிகளை முதன் முதலாக தொடங்கினார்.
2 ஆதரவற்றவர்கள் மற்றம் ஏழை மாணவர்களுக்காக தஞ்சை மற்றம் இதர இடங்களில் இலவச தொடக்க மற்றும் உயர் கல்வி நிலையங்களை நிறுவி நிர்வகித்தார்.
3 நவீன கல்வி முறைக்காக 'நவ வித்யா' என்ற முறையை மேற்படி பள்ளிகளில் அறிமுகம் செய்தார்.
4 நாயக்க மன்னர்களால் கட்டிய சரஸ்வதி மஹால் இரண்டாம் சரபோஜியால் செறிவுட்டப்பட்டது.
5 முக்தாம்பாள் அன்ன சத்திரத்தில் இரண்டு வகுப்பறைகளில் 15 ஆசிரியர் உதவி கொண்டு 464 மாணவர்களுக்கு காலையும் மாலையும் கல்வி கற்பிக்கப்பட்டது.
6 கந்தன்குடி கிறிஸ்தவ பள்ளிக்கு ஆதரவளித்தார்

www.Padasalai.Net

7 தன்வந்தரி மஹால் மூலம் மனிதர், விலங்ககளுக்கான மூலிகை ஆராய்ச்சி நிலையத்தை நிறுவினார்.

**18.** இந்தியாவில் போர்த்துகீசியரின் வருகையினால் ஏற்பட்ட தாக்கத்தை விவரி

1. ஐரேப்பியர் இநதிய அரசர்களை முதன் முதலில் வென்றது
2. இந்திய அரசர்களினின் ஒற்றுமையின்மை வெளிப்பட்டது.
3. போர்களில் வெடிமருந்தும், பீரங்கிப் படையும் முக்கிய பங்க வகிக்க தொடங்கின.
4. அராபியரின் வணிக முற்றுரிமை கட்டுப்படுத்தப்பட்டது.
5. ஐரோப்பியர் உடனான திருமண உறவு மூலம் புதிய யூரேசிய இனக்குழு உருவானது.
6. பின்நாளில் இவ் இனக்குழு ஆசிய, ஆப்பிரிக்க காலனிகளுக்கு சென்றது.
7. போர்துக்கீசிய சமய பரப்புக்குழுவினர் வந்தனர். கடற்கரையோர பரதவகுல மக்களை கிறஸ்தவராக மதம் மாற்றினர். உரை நடை, அச்சு பதிப்பில் தடம் பதித்தனர்.

**19.** ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி மதராஸ், பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் வணிகம் செய்யும் உரிமையை எவ்வாறு நிலை நாட்டியது?

1. 1639ல் சந்திரகிரியின் அரசர் சென்னையை ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனிக்கு கொடுத்து அதில் கோட்டை கட்ட அனுமதி வழங்கினார். அங்கு ஆங்கிலேயர் புனித ஜார்ஜ் கோட்டையை கட்டி வணிகம் செய்தனர்.
2. 1668 ல் இரண்டாம் சார்லஸ் மன்னர் தனக்கு கிடைத்த திருமணப் பரிசான பம்பாய் தீவை ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கினார். இது பம்பாயில் ஆங்கிலேயர் வணிகம் செய்ய உரிமையை பெற்றுத்தந்தது.
3. ஷாஜகானின் மகனும் வங்க ஆளுநருமான ஷா சுஜாவிடம் கம்பெனி வணிக உரிமை பெற்றனர்.அது முறையாக உறுதி செய்யப்படவில்லை.
4. பின்னர் 1608 ல் முறையாக வணிக உரிமை பெற்றனர்.
5. அவ்வுரிமையை எதிர்த்த உள்ளுர் ஆட்சியாளர்களை எதிர்ப்பை சரிசெய்து 1690ல் கம்பெனி சுதநுதியில் முதல் குடியேற்றத்தை நிறுவினர்.
6. இவ்விடமே பிற்காலத்தில் கல்கத்தாவாக மாறியது.
7. 1696 ல் அங்கு புனித வில்லியம் கோட்டையை கட்டினர்.

20. கர்நாடக பகுதிகளில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே நடைபெற்ற போர்களுக்கான காரணங்கள் யாவை?

1. இந்தியாவில் ஆதிக்கம் செலுத்துவதில் ஏற்பட்ட போட்டி
2. ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமை போர் இங்கு எதிரொலித்தது.
3. ஆற்காடு, ஹைதராபாத்தில் ஏற்பட்ட அரியணை வாரிசுரிமை பிரச்சினை.
4. ஐரோப்பாவில் நடைபெற்ற எழாண்டுப் போரின் தாக்கம்
5. பிரான்சின் துய்ப்ளே பிரான்சின் ஆதிக்கத்தை இந்தியாவில் நிலை நாட்ட விரும்பினார்.
6. கிளைவ் போன்ற ஆங்கிலயர்கள் ஆங்கில ஆதிக்கத்தை இந்தியாவில் நிலை நாட்ட விரும்பியது.

21. வங்காளத்தின் உண்மையான ஆட்சியாளராக ஆங்கிலேயர் எவ்வாறு எப்பொழுது மாறினர்?

1. பிளாசிப் போர் வணிகக் குழுவை வங்காளத்தின் இறையாண்மை கொண்ட அரசியல் சக்தியாக்கியது.
2. வங்காளத்திலிருந்து தப்பியயோடிய மீர்காசிம், முகலாய அரசர் இரண்டாம் ஷா ஆலம், அவத்தின் நவாப் சிராஜ் உத் தௌலா ஆகியோர் ஆங்கிலேயருக்கு எதிராக கூட்டணி அமைத்தனர்.
3. 1764 ல் பச்சார் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.
4. அலகாபாத் உடன்படிக்கை மூலம் போர் முடிவுக்கு வந்தது.
5. இவ் உடன்படிக்கையின் மூலம் வணிகக்குழு வங்காளம், பீகார், ஒரிசா அசிய பகுதிகளின் நில வரி வசூலிக்கும் (திவானி) உரிமையைப் பெற்றது.

6. மேலும் வங்காளத்திலிருந்த பர்த்தவான், மிட்னாபூர், சிட்டகாங் ஆகிய மூன்று மாவட்டங்களுடன் கல்கத்தாவின் மீதான இறையாண்மையையும் பெற்றது.
7. இவ்வாறாக ஆங்கிலேயர் வங்காளத்தின் உண்மையான ஆட்சியாளராக மாறினர்.

**22.** இந்தியாவில் துய்ப்ளேவின் வாழக்கை மற்றும் சாதனைகள் பற்றிச் சுருக்கக்கூறுக.

1. இந்திய பிரெஞ்சுப் பகுதியின் ஆளுநர்.
2. பிரெஞ்சு ஆதிக்கத்தை இந்தியாவில் நிலைநாட்ட முயற்சி மேற்கொண்டார்.
4. முதல் இரண்டு கர்நாடக போரில் ஈடுபட்டு பிரான்சின் பெறுமையை நிலைநாட்டினார்.
4. ஆங்கில கடற்படையை தோற்கடித்தது. சென்னையை கைப்பற்றியது.
5. ஆங்கிலேயர் புதுச்சேரியை தாக்கிய போது அதை பாதுகாத்தது.
6. ஹைதராபாத்தில் முசாபர்ஜங்கையும், கர்நாடகத்தில் சந்தாசாகிப்பையும் அரியணை ஏற்றினார்.
7. தமது பதவிக்காலம் வரை ஆங்கிலேயரின் செல்வாக்கு பரவுவதை தடுத்தார்.

23. வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப் படைத் திட்டத்தினைப் பற்றி விவரி.

1. துணைப் படைத்திட்டத்தினை ஏற்கும் இந்திய ஆட்சியாளர் தனது சொந்தப் படைகளை கலைக்க வேண்டும்.
2. பிரிட்டிஷ் படைகளை ஏற்பதோடு ஆங்கில அதிகாரி ஒருவரை ஸ்தானிகராக **(Resident)** ஏற்கவேண்டும்.
3. பிரிட்டிஷ் படைகளுக்கான பராமரிப்புச் செலவை ஏற்க வேண்டும். அது முடியாத போது மாகாணத்தின் ஒரு பகுதியை பிரிட்டிஷார் வசம் ஒப்படைக்க வேண்டும்.
3. துணைப் படைத் திட்டத்தினை எற்ற அரசர் பிற ஐரோப்பிய நாடுகளுடனான தொடர்பைத் துண்டிக்க வேண்டும். பிரெஞ்சு நிர்வாகத்தோடு தொடர்பு இருக்கக் கூடாது.
4. பிற இந்திய அரசுகளோடு கம்பெனியின் அனுமதி இல்லாமல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக்கூடாது.
5. ஆங்கிலேயர் அனுமதியில்லாமல் மற்ற ஐரோப்பியரை பணியில் அமர்த்தக் கூடாது.
6. எந்த அரசும் பிற அரசுகளின் உள்நாட்டு பிரச்சினைகளில் தலையிடக்கூடாது.
7. துணைப் படைத்திட்டத்தினை ஏற்ற அரசுகள் தங்கள் இறையாண்மையை இழந்து அரசியல் மற்றும் இராணுவ விவகாரங்களில் கம்பெனியை சார்ந்திருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டது.

24. ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனத்தின் கீழ் கல்வி முறை எவ்வாறு வளர்ச்சி பெற்றது?

1. வாரன்ஹேஸ்டிங்ஸ் மூஸ்லீம்களுக்காக ஒரு மதரசாவை நிறுவினார்.
2. காரன் வாலிஸ் வாரனாசியில் ஒரு சமஸ்கிருத கல்லூரியை நிறுவினார்.
3. ஹேஸ்டிங்ஸ் கிறிஸ்தவ சமயபரப்பாளர் மூலமாக தாய்மொழிக் கல்வியை பரப்பினார்.
4. கல்கத்தா இந்துக் கல்லூரிக்கு ஹேஸ்டிங்ஸ் புரவலராக இருந்தார்.
5. கல்கத்தா, பம்பாயில் மருத்துவக் கல்லூரியும், ரூர்க்கில் பொறியியல் கல்லூரியும் தொடங்கப்பட்டது.
6. 1835 ல் மெக்காலே ஆங்கில வழிக் கல்வியை பரிந்துரைத்ததால் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியாகவம் அரசு அறிவித்தது.
7. இந்தியாவின் அறிவுப் பட்டயமான சார்லஸ் உட் கல்வி அறிக்கை ஆரம்பகல்வி, உயர்கல்வி, கல்லூரி படிப்பில் தடம் பதித்தது.

25. 1865 ம் ஆண்டு இந்திய வனச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட சூழ்நிலைகளை விவரி. அதன் விளைவுகள் யாவை?

1. பிகாரில் "ஜங்கில் மஹல்" காடு அழிக்கப்பட்ட சமயம்.
2. வேளாண்மைக்காக காடுகள் அழிக்கப்பட்டது
3. காபி தோட்டம் விளைவிக்க மற்றும் இரயில் பாதைக்கான மரப்பலகைகளுக்காகவும் காடுகள் அழிக்கப்பட்டன.
3. எனவே 1865ல் இந்திய வனச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

4. இச்சட்டம் காட்டு வளங்களை பூர்வீக குடி மக்கள் பயன்படுத்த தடை விதித்தது.
5. இதனால் பூர்விக குடிகள் கலகத்தில் ஈடுபட்டனர்.
6. இச்சட்டங்கள் இன்றளவும் மக்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறது.

26. தென் தமிழகத்தில் பாளையக்காரர் அமைப்பு முறை பற்றி விவரிக்கவும்

1. 1530 ல் முதன் முதலாக காகத்திய அரசில் பாளையக்காரர் முறை பின்பற்றப்படடது.
2. விஜய நரக பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு மதுரையில் நாகம நாயக்கரும் அவரது மகன் விஸ்வநாக நாயக்கரும் சுதந்திர மன்னர்களாயினர்.
3. அவர்கள் தங்கள் பகுதியை 72 பாளையங்களாக பிரித்து மதுரையில் ஒரு கோட்டை எழுப்பினர். அதில் 72 அரண்கள் அமைத்து ஒவ்வொன்றையும் ஒரு தலைமையின் கீழ் கொண்டுவந்தனர்.
4. பாளையக்காரர்கள் அரசருக்க ஆண்டு தோறம் குறிப்பிட்ட தொகையை கப்பமாக செலுத்தினர்.போரின் போது படை வீரர்களை அனுப்பினர்.
5. நிதியாதரத்தை பெற தங்கள் பகுதிகளில் வரி வசூலித்தனர். சட்ட ஒழுங்கை பராமரித்தனர்.
6. இத்துடன் பல பட்டங்களுடன் கூடுதல் சிறப்பதிகாகரங்களும் பெற்றனர். நீதி வழங்கம் அதிகாரமும் பெற்றனர்.
7. மேற்கு பகுதியில் மறவர் பாளையக்காரர்களும் கிழக்கில் தெழுங்கு பேசும் பாளையக்காரர்களும் இருந்தனர்.

27. 1806 ம் ஆண்டின் வேலூர் புரட்சிக்கான காரணங்களையும் போக்கினையும் விவரிக்கவும்.

1. அரியனையை இழந்த அரசர்கள், குருநில மன்னர்களின் சந்ததியினர், திப்பு மகன்களின் பிரதிநிதிகள், விசுவாசிகள் 1806 ல் வேலூரில் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சி செய்ததே வேலூர் கலகம் ஆகும்.
2. தலைப்பாகையுடன் கூடிய சீருடை அறிமுகம், காதணிகளை அணிவதும் சமயச் சின்னங்களை இட்டுக் கொள்வதும் தடை செய்யப்பட்டது. புரட்சியில் வீரர்கள் பங்கு பெற காரணமாயிற்று.
3. ஜுலை 10ம் நாள் விடியற்காலை முதல் மற்றும் 23ம் படைப்பிரிவைச் சேர்ந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தை தோற்றுவித்தனர். கர்னல் பான்கோர்ட் மற்றும் கர்னல் மி கேரஸ் ஆகியோர் கொல்லப்பட்டனர்.
4. ராணிப் பேட்டையில் இருந்து வந்த கில்லேஸ்பி புரட்சியை அடக்கினார்.
5. சிலர் தூக்கிலிடப்பட்டனர். சிலர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இக்கலகம் ரத்தக்களரியில் முடிவடைந்தது
6. திப்புவின் மகன் கல்கத்தாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டார். படைத்தளபதியும், சென்னை ஆளுநரும் திருப்பியழைக்கப்பட்டனர்.

28. 1857 *ஆம்ஆண்டு புரட்சிக்கான காரணங்களையும் மற்றும் விளைவுகளையும் விவரிக்கவும்.*

காரணங்கள்:

1 வாரிசு இழப்புக் கொள்கை

2 விவசாயம் செய்யாத நிலத்திற்கும் வரிவிதிப்பு

3 உயர் குடி மூஸ்லிம்கள், கற்றறிந்தோர் அந்நியப்படல், மத உணர்வுகள் பாதிக்கப்படல்

4 கொழுப்பு தடவிய துப்பாக்கி தோட்டக்கள்

விளைவுகள்:

5. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி முடிவுக்கு வந்தது.
6. இந்தியாவின் ஆட்சி அரசியின் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.
7. இந்திய தலைமை ஆளுநர் அரசப் பிரதிநிதி (வைஸ்ராய்) என அழைக்கப்பட்டார். (கானிங்பிரபு முதல் வைஸ்ராய்).

www.Padasalai.Net

**29. இந்தியாவில் கிறித்தவ மதப்பரப்பாளர்கள் ஆற்றிய பணிகளை விளக்குக**

1. சமூகத்தில் பொருளாதார ரீதியாகத் தாழத்தப்பட்ட மக்களுக்காக பள்ளிகளை நிறுவினர்.
2. அதன் மூலம் அரசுப் பணிகளில் அவர்களைச் சேர்ந்து அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த முயன்றனர்
2. பொதுச் சாலைகளை பயன்படுத்துதல், தாழத்தப்பட்ட பெண்கள் மேலாடை அணிந்து கொள்வது போன்ற சமூக உரிமைக்காகவும் போராடினர்.
3. அனாதைக் குழந்தைகளையும், ஆதரவற்றோரையும் தங்கள் நிறுவனங்களில் தங்க வைத்து அவர்களுக்கு கல்வி வழங்கினர்.
4. பஞ்சங்களின் போது (ஆங்கில அரசு உண்மையான அக்கரையுடன் நிவாரணப் பணிசெய்யாததால்) கிறிஸ்தவ சமய பரப்பு குழுவினர் தங்கும் இடவசதி, நிவாரண நடவடிக்கை மேற் கொண்டதால் மதம் மாற்றம் செய்ய வாய்ப்பு கிடைத்தது.
5. இவ்வாய்ப்பினால் திருநெல்வேலி மாவட்டத்தில் பல கிராமங்களையும், ஆந்திராவில் மாலா மடிகா சமூகங்களை சேர்ந்தோரையும் பெரும் எண்ணிக்கையில் மதம் மாற்றினர்.
6. இந்தியாவை 200 ஆண்டுகள் அட்சி செய்த ஆங்கிலேய அரசு கிராமப்புற ஏழை மக்களுக்கு கல்வி வழங்கும் பொறுப்பை தட்டிக் கழித்ததால் அப்பொறுப்பை (அவ் வாய்ப்பை) கிறிஸ்தவ சமய பரப்பு நிறுவனங்கள் தன்னார்வத்துடன் செய்தன.
7. மருத்துவமனைகள், மருந்தகங்களை நிறுவினர்.

**30. தமிழ் நாட்டில் நடந்த சமூக சீர்திருத்த இயக்கங்களை எடுத்துக் காட்டுக.**

www.Padasalai.Net

1. சாமிதோபில் பிறந்த வைகுண்ட சாமிகளை பின்பற்றுவோர் “அய்யா வழி” வந்தவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.
2. இவருடைய “நிழல் தாங்கல்” வழிபாட்டுக் கூடங்கள் சாதி கட்டுபாடுகளை உடைத்தது.
3. இவரது சீடர்கள் தலைபாகை அணிந்தனர்.
4. 1851 ல் இவரது இறப்பிற்க்கு பின்னரும் தென் திருவாங்கூர் பகுதியில் கிறிஸ்தவ சமயம் பரவாமல் இருக்க ஐயா வழி பெரும் பங்காற்றிவருகிறது.
5. சிதம்பரத்தில் பிறந்த இராமலிங்க அடிகள் “சத்ய தர்ம சாலையை” வடலூரில் நிறுவினார்.
6. சாதி சமய வேறுபாடின்றி அனைவருக்கும் சமபந்தி விருந்தளித்தார்.
7. மக்களை கவர்ந்த, நெஞ்சை உருக்கும் இவரது பாடல்கள் “திருவருட்பா” என்ற பெயரில் இவரது சீடர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

---

எனதருமை வரலாற்று மாணவர்களே அதிக மதிப்பெண் பெற்று வரலாற்றில் சாதனை படைக்க வாழ்த்தும்

உங்களவன்

சு. சண்முகசுந்தரம் முதுகலை ஆசிரியர் பாரதியார் வித்யாலயம் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி

---

# பதினொராம் வகுப்பு இரண்டாம் தொகுதி

## சு. சண்முகசுந்தரம் முதுகலை ஆசிரியர் பாரதியார் வித்யாலயம் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி

## ஒரு மதிப்பெண் வினா விடைகள்

1. ஹரிஹரர் மற்றும் புக்கர் விஜயநகரப் பேரரசை ஏற்படுத்தும் முன்பாக ஹொய்சாளர் இடம் பணி செய்தனர்.
2. இபன்பதூதா மொராக்கோ நாட்டுப் பயணி.
3. கீழ்கண்டவற்றை காலவரிசைப்படுத்துக.
4. சங்கம வம்சம்,சாளுவ வம்சம்,துளுவ வம்சம்,ஆரவீடு வம்சம்.
5. விஜயநகர அரசின் அரச முத்திரை பன்றி
6. மதுராவிஜயம் என்ற நூலை கங்காதேவி எழுதினார்.
7. இரண்டாம் தேவராயர் சங்கம வம்சத்தின் சிறந்த ஆட்சியாளராகக் கருதப்பட்டார்.
8. கிருஷ்ணதேவராயர் தன் வெற்றியின் நினைவாக வெற்றித்தூணை எழுப்பிய இடம் சிம்மாச்சலம்.
9. எந்த இரு பகுதிகளிடையே இடைப்படு நாடாகப் புதுக்கோட்டை இருந்தது.சோழ மற்றும் பாண்டிய அரசுகள்
10. ஷா நாமாவை எழுதியவர் பிர்தௌசி
11. முகம்மது கவான் ஒரு மதரசாவை நிறுவி அதில் 3000 கையெழுத்து நூல்களை வைத்திருந்த இடம் பீடார்.
12. இராஜா கிருஷ்ணதேவ் கோல்கொண்டா கோட்டையை கட்டினார்.
13. அத்வைதம் என்னும் தத்துவத்தை இந்து மதத்திற்கு வழங்கியவர் ஆதிசங்கரர்.
14. வைதீக வேதப்பிரிவுகளுக்கும், பிறமதப்பிரிவுகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களைப் பற்றிக் குறிப்பிடுவது திருத்தொண்டர்களின் புகழ் பாடும் தொகுப்புகள்
15. கூன் பாண்டியன் என்று அழைக்கப்பட்டவர் மாறவர்மன் அரிகேசரி
16. சமண மதத்திலிருந்த போது அப்பர் இவ்வாறு அறியப்பட்டார் தர்மசேனர்.
17. பக்கீர் எனக் குறிப்பிடப்படுபவர் இஸ்லாமிய ஞானி
18. மாதாவச்சாரியார் துவைதம் தத்துவப் பள்ளியைச் சார்ந்தவர்
19. இராமானந்தரின் சீடர் கபீர்.
20. முதன் முதலாக இந்தி மொழியில் தனது மதத் தத்துவப் பிரச்சாரத்தை மேற்கொண்டவர் இராமானந்தர்
21. அக்பரின் அரசவையில் ஆக்ராவின் பார்வைத் திறனற்ற பாடகர் என்ற அறியப்பட்டவர் சூர்தாசர்
22. 1526 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் பானிபட் போரில் பாபர் பீரங்கிப் படையை திறம்பட பயன்படுத்தியதன் மூலம் வெற்றி பெற்றார்
23. மராத்திய மன்னர் சிவாஜியின் சமகாலத்தவர் துக்காராம் ஆவார். 1526 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் பானிபட் போரில் பாபர் பீரங்கிப் படையை திறம்பட பயன்படுத்தியதன் மூலம் வெற்றி பெற்றார்

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

24. கடைசிப் போரான காக்ரா போரில் பாபர் ஆப்கானியர்களுக்கு எதிராகப் போரிட்டார்.
25. ஷெர்கான் தனது உயரிய அரசியல் மற்றும் இராணுவ திறமையினால் சௌசா போரில் வெற்றி பெற்றார்.
26. ஜாகீர்தாரி நில உடமை உரிமை முறையில் நிலத்திற்கான வரியை வசூலிக்கும் பொறுப்பும், அந்நிலத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் அரசு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.
27. அக்பரது நிதி நிர்வாகம் ஷெர்ஷா நிர்வாக முறையை பின்பற்றி அமைக்கப்பட்டது.
28. இளவரசர் குஸ்ருவுடன் இணைந்து கலகத்தை தூண்டிவிட்டதற்காக ஜஹாங்கீரால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர் குருஅர்ஜுன்தேவ் ஆவார்.
29. ஷாஜகான், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பதினான்காம் லூயி ஆகியோர் சமகாலத்தவர்.
30. ஔரங்கசீப் தனது ஆட்சியின் போது ஜஸியா வரியை மீண்டும் விதித்தார்.
31. கப்பலின ஒட்டகம் எனச் சொல்லப்படும் தொழில்நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் அரசர் அக்பர் ஆவார்.
32. ஜஹாங்கீர் மற்றும் ஷாஜகான் அமைத்த ஷாலிமார் தோட்டங்கள், இந்திய தோட்டக் கலையில் குறிப்பிடத்தக்கவையாகும்.
33. குவாலியரைச் சேர்ந்த தான்சேனை அக்பர் ஆதரித்தார்.
34. பாதுஷா நாமா என்பது ஷாஜகான் வாழ்கை வரலாறாகும்.
35. தஜிகநிலகந்தி ஒரு ஜோதிட ஆய்வு நூலாகும்.
36. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை இயற்றியவர் குமரகுருபரர்.
37. கிழே உள்ள ஆட்சியாளர்களுள் யார் அக்பரின் சமகாலத்தவர் இல்லை? இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணி.
38. வலிமை மிக்க கொரில்லா போர் முறையை பினபற்றியோர் *மராத்தியர்*
39. சிவாஜியின் குரு *தாதாஜி கொண்டதேவ்* ஆவார்
40. புரந்தர் உடன்படிக்கை, சிவாஜிக்கும் *ஜெய்சிங்* க்கும் இடையே கையெழுத்தானது.
41. சிவாஜியின் ஆலோசனை சபை *அஷ்டபிரதானம்* என்று அழைக்கப்பட்டது.
42. மராத்தியர் கைப்பற்றிய மாவட்டடத்தின் வருவாயில் *1/4* சௌத் என வசூலிக்கப்பட்டது
43. சிவாஜியின் இராணுவ அமைப்பில் மிகச்சிறிய படை அலகின் தலைவராக *நாயக்* இருந்தார்.
44. மராத்திய சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தை மேம்படுத்திய பேஷ்வா *முதலாம் பாஜிராவ்* ஆவார்.
45. *நாதிர்ஷா* கோகினூர் வைரத்தை எடுத்துச் சென்றார்.
46. *சால்பை* உடன்படிக்கை முதலாம் ஆங்கிலோ மராத்தியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது
47. இரண்டாவது ஆங்கிலேய மராத்தியப் போரின்போது ஆங்கிலேய கவர்னர்-ஜெனரலாக இருந்தவர் வெல்லெஸ்லி பிரபு.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

48. கிராம அளவில் வருவாய் வசூலை மத்திய அரசுக்கு அனுப்பும் பொறுப்பை *பட்டேல்* ஏற்றிருந்தனர்.
49. கொங்கணம் கண்டேரி, விஜயதுர்க் ஆகிய இடங்களில் கடற்படைத் தளங்களை கட்டியவர் *பாலாஜி விஸ்வநாத்*
50. ஆவார்.
51. நயங்காரா அமைப்பை மேம்படுத்தியவர் *கிருஷ்ணதேவராயர்*
52. மனிதர்களுக்காகவும் மற்றம் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரிக்க *தன்வந்தரி மஹால்* இரண்டாம் சரபோஜியால் நிறுவப்பட்டது.
53. கீழ்க்கண்டவற்றுள் இரண்டாம் சரபோஜி எழுதாத புத்தகம் என்ன? *குமார சம்பவம்*
54. இந்தியாவில் போர்த்துகீசியரின் அரசியல் தலைமையிடம் *கோவா* ஆகும்
55. மேற்கு ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நுழைவாயிலாக இருந்த துறைமுகம் *சூரத்* ஆகும்.
56. ஆங்கிலேயர் 1639 ஆம் ஆண்டு உள்ளூர் ஆட்சியாளரிடமிருந்து பெற்ற நிலத்தில் *புனித ஜார்ஜ் கோட்டையை* கட்டினர்
57. வண்ணம் பூசப்பட்ட கலம்காரி எனப்படும் துணிவகைகளுக்குப் பெயர் பெற்ற பகுதி *சோழ மண்டலம்* ஆகும்
58. நீலநீர்க்கொள்கையுடன் தொடர்புடையவர் *பிரான்ஸிஸ்கோ டி அல்மெய்டா*
59. *ஹென்ரிக்ஸ்* தமிழ் அச்சுப்பதிப்பின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
60. *மயிலாப்பூர்* போர்த்துகிஷியரின் கருப்பர் நகரமாகும்
61. அம்பாய்னா படுகொலைக்கு காரணமானவர்கள் *டச்சு கிழக்கிந்திய கம்பெனி*
62. டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியின் சோழமண்டலப் பகுதியின் தலைமையிடம் *பழவேற்காடு* ஆகும்
63. பிரான்சிஸ்மார்ட்டின் என்பவர் *புதுச்சேரிஐ* பிரெஞ்சுக்குடியேற்றங்களின் கேந்திரமையமாக ஆக்கினார்.
64. இரண்டாம் சார்லஸ் வரதட்சணையாகப் பெற்ற *பம்பாய் தீவு* ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மாற்றம் செய்யப்பட்டது.
65. முதலாம் கர்நாடகப் போரின் போது *துய்ப்ளே* புதுச்சேரியின் ஆளுநராக இருந்தார்.
66. ராபர்ட் கிளைவ் *பக்சார் போர்இல்* வெற்றி பெற்று வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை வலிமை பெறச் செய்தார்.
67. வந்தவாசிப் போர் *அயர்கூட் மற்றும் லாலிக்*கிடையே நடைபெற்றது.
68. ஏழாண்டுப் போர் *பாரிஸ் உடன்படிக்கையுடன்* முடிவுக்கு வந்தது.
69. *பக்சார் போர்* இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் உண்மையில் நிறுவப்படக் காரணமான போராகு
70. *அலகாபாத் உடன்படிக்கையினால்* இரண்டாம் ஷா ஆலம் வங்காளம் பீகார் ஒரிசாவின் திவானி உரிமையை ஆங்கிலேயருக்கு வழங்க நேரிட்டது.
71. *ராபர்ட் கிளைவ்* வங்காளத்தில் இரட்டை ஆட்சியை அறிமுகப்படுத்தினார்.
72. *ஒழுங்கு முறைச் சட்டம்* இந்தியாவில் ஆங்கிலேய வணிகக் குழு ஆட்சியை முறைப்படுத்தியது.
73. இந்தியாவில் முதல் ஆங்கிலேய ஆளுநராக இங்கிலாந்து நாட்ளுமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர் *கானிங்*

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

74. வங்காளம் ஜமீன்தார்களோடு காரன்வாலிஸ் நிலையான நிலவரித் திட்டத்தை மேற்கொண்டார்.
75. இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர் *தாமஸ் மன்றோ*
76. தக்கர்களை அடக்கிய ஆங்கிலேய அதிகாரி. *வில்லியம் ஸ்லீமேன்*
77. வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின் படி ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பட்ட முதல் மாகாணம் *சதாரா*
78. நிர்பந்தப்படுத்தி வலுக்கட்டாயமாக வரி வசூலிப்பதை *சித்திரவதைச் சட்டம்* நியாயப்படுத்தியது.
79. *வில்லியம் பெண்டிங்* இந்தியாவில் ஆங்கில மொழியை அலுவல் மொழியாகவும், பயிற்று மொழியாகவும் அறிமுகப்படுத்தினார்.
80. சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு *1857*
81. *ராஜா ராம் மோகன் ராய்* என்பவரின் முயற்சியால் இந்தியாவில் சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப்பட்டது
82. தென் இந்தியாவில் முதல் இருப்பப்பாதை போக்கவரத்து 1856ல் சென்னையிலிருந்து *அரக்கோணம்* வரை இயக்கப்பட்டது.
83. 1869 ல் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டதன் விளைவாக இந்தியா ஐரோப்பாவிற்கிடையேயான பயணதூரம் *4000* மைல்களாக குறைக்கப்பட்டது.
84. உடையார் அரசர்களுக்கு எதிராக மராத்தியர்களை வெற்றிகரமாக கையாண்டபின் *ஹைதர் அலி* உண்மையான அரசர் ஆனார்.
85. திப்பு சுல்தான் *கொடுங்களூர்* பகுதியைக் கைப்பற்றியதால் மூன்றாம் ஆங்கிலேய
மைசூர் போர் தொடங்கியது.
86. பாளையக்காரர் முறை முதன் முதலில் காகத்திய பேரரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது.
87. நெற்கட்டும்செவல், வாசுதேவநல்லூர், பனையூர் ஆகிய புலிதேவரின் மூன்று முக்கியமான கோட்டைகளை யூசுப்கான் தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்ட வந்தார்.
88. வேலு நாச்சியார் *இராமநாதபுரம்* அரசருடைய மகள்.
89. வீரபாண்டிய கட்டப்பொம்மன் தொடர்பான பிரச்சினைகளை தவறாகக் கையாண்டதால் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆங்கிலேய ஆட்சியர் ***W.C.*** *ஜாக்சன்* ஆவார்.
90. வேலூர் புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்த நிகழ்வு *புதிய தலைப்பாகை* ஆகும்.
91. கோல் எழுச்சிக்குக் (துண்டுகோலாய்) காரணமானவர் *பிந்த்ராய் மன்கி* ஆவார். கோல் கிளர்ச்சியின் தலைவர் *புத்தபகத்.*
92. 1857 ஆம் ஆண்டு புரட்சியின் போது இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாக இருந்தவர் *கானிங்* ஆவார்.
93. 1857 ம் ஆண்டு புரட்சியின் போது நானா சாகேப்பின் படைகளைத் தோற்கடித்தவர் *மேஜர் ஜெனரல் ஹோவ்லாக்*
94. இந்தியாவில் சீர்திருத்தங்கள் பற்றிய பல கருத்துக்கள் தோன்றிய முதல் மாகாணம் *வங்காளம்* ஆகும்
95. இந்திய மறுமலர்ச்சியின் தந்தை *இராஜாராம் மோகன்ராய்* ஆவார்.
96. தேசிய சமூக மாநாடு *ரானடே* முயற்சியால் ஒருங்கிணைக்கப்பட்டது.

www.Padasalai.Net

97. வேதங்களை நோக்கி திரும்புக என்று முழக்கமிட்டவர் *தயானந்த சரஸ்வதி* ஆவார்.
98. கதைகள் மற்றும் வியக்கதக்க உவமைகளின் மூலம் *இராமகிருஷ்ண பரமஹம்சர்* தனது கருத்துக்களை விளக்கினார்.
99. 'ஒரு பைசா தமிழன்' என்ற வாரப் பத்திரிக்கையை நடத்தியவர் *அயோத்தி தாச பண்டிதர்* ஆவார்.
100. பிரம்ம ஞான சபை *அமெரிக்க ஐக்கிய நாடுகள்* ல் நிறுவப்பட்டது.
101. தமிழ் நாட்டில் பிரம்ம சாமாஜத்தின் ஆதரவாளராக திகழ்ந்தவர் *காசி விசுவநாத முதலியார்* ஆவார்.
102. மேற்கத்திய அறிவியலை அறிமுகப்படுத்த சையது அகமதுகான் நிறுவிய அமைப்பு *அறிவியல் கழகம்* ஆகும்.
103. இஸ்லாமிய சமூகத்தினரின் சமய மீளுருவாக்கத்தை நோக்கமாக கொண்டிருந்த இயக்கம் *தியோபந்த் இயக்கம்* ஆகும்.;
104. சிவாஜியின் ஆட்சிக்கு பின் வந்தவர்களை கால வரிசை படி எழுதவும்.
சம்பாஜி, ராஜாராம், சாஹு, இரண்டாம் சாம்பாஜி

www.Padasalai.Net

**iv.** பொருத்துக. (பொருத்தப்பட்டுள்ளது.)

| | | |
|---|---|---|
| 1. | ஆப்துல் ரசாக் | பாரசீகம் |
| 2. | நிகிடின் | ரஷ்யா |
| 3. | டோமிங்கோ பயஸ் மற்றும் நூனிஸ் -- | போர்த்துகல் |
| 4. | செல்லப்பா | சாளுவ நாயக்க |
| 5. | கபீர் | நெசவாளர் |
| 6. | சூர்தாஸ் | சாகித்திய லாகிரி |
| 7. | சூபியிஸம் | ஷேக் தாதி |
| 8. | கூன் பாண்டியன் | சம்பந்தர் |
| 9. | அபுல் பாசல் | அக்பர் |
| 10. | ஜும்மா மசூதி | ஷாஜகான் |
| 11. | பாதுஷாஹி மசூதி | ஔரங்கசீப் |
| 12. | புராண கிலா | ஷெர்சா |

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | |
|---|---|
| 13. அமத்யா | அரசின் அனைத்து பொது கணக்குகள் |
| 14. சுமந்த் | போர் மற்றும் அமைதி |
| 15. பண்டிட்ராவ் | பொது ஒழுக்க நடைமுறைகள் |
| 16. வாக்கிய நாவிஸ் | அரசரின் நடவடிக்கைகய் பற்றிய ஆவணங்கள் |

| | |
|---|---|
| 18. சாமுத்ரி | கள்ளிக் கோட்டை அரசர் |
| 19. ஹென்றிக்ஸ் | அச்சுப் பதிப்பு |
| 20. முஜாபர் ஜங் | ஹைதராபாத் நிஜாம் |
| 21. ஆற்காடு நவாப் | சந்தா சாகிப் |
| 22. ஆர்தர் காட்டன் | கொள்ளிடம் |
| 23. வில்லியம் ஸலிமேன் | தக்கர்களை ஒடுக்குதல |
| 24. வில்லியம் பெண்டிங் | சதி ஒழிப்பச் சட்டம் |
| 25. காரன்வாலிஸ் | சமஸ்கிருத கல்லூரி |
| 26. ஜில்லெஸ்பி | வேலூர் கலகம் |
| 27. மஞ்சி | சாந்தல்கள் |
| 28. ஜாக்கோபியன் கழகம் | ஸ்ரீரங்கப்பட்டணம் |
| 29. மங்கள் பாண்டே | பாரக்பூர் |

30. ஆங்கிலேய சமய பரப்பக்குழு -------- வில்லியம் காரே மற்றும் ஜான் தாமஸ்

| | |
|---|---|
| 31. பார்சி செய்திதாள் | ராஸ்ட் கோப்தார் |
| 32. தியோபந்த் இயக்கம் | முகமது காசிம் நதோதவி |
| 33. விவேகானந்தர் | விடிவெள்ளி |

**IV. அ) கீழ்க் கண்டவற்றுள் எது சரியாகப் பொருத்தப்படவில்லை**

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

| | | | |
|---|---|---|---|
| 34. | சிவாஜி | மலைஎலி | சரி |
| 35. | முதலாம் பாஜிராவ் | உத்கிர் போர். | தவறு (தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது) |
| 36. | தைமுர் ஷா | லாகூரின் வைஸ்ராய் | சரி |
| 37. | தேசிங்கு | செஞ்சி | சரி |

**IV அ. கீழ்கண்ட வற்றுள் எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது.**

| | | | |
|---|---|---|---|
| 38. | பாஸ்கராச்சார்யா | நீதி நெறி விளக்கம் | தவறு (தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது) |
| 39. | அமுக்த மால்யதா | கிருஷ்ணதேவராயர் | சரி |
| 40. | ஜனன்னாத பண்டிதர் | ரசகங்காதரா | சரி |
| 41. | அல்லசானி பெத்தன்னா | மனுசரித்ரா | சரி |
| 42. | தரங்கம்பாடி | டேனியர் | சரி |
| 43. | சர் தாமஸ் ரோ | பிரஞ்சுக்காரர் | தவறு (தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது) |
| 44. | அன்வாருதீன் | ஆற்காடு நவாப் | சரி |
| 45. | அல்புபர்க் | போர்த்துகீஷியர் | சரி |
| 46. | கங்காதரராவ் | ஜான்சி | சரி |
| 47. | ரகுஜி போன்ஸ்லே | நாக்பூர் | சரி |
| 48. | ஷாஜி | சதாரா | சரி |
| 49 | சிந்தியா | கோலாப்பூர் | தவறு (தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது) |

www.Padasalai.Net

**II. சரியான கூற்றினை தேர்ந்தெடு : (சரியானவை மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது)**

1. அப்துல் ரசாக் ஒரு பாரசீகத் தூதுவராகக் கொச்சியிலிருந்த சாமுத்திரியின் அவைக்கு வந்தார்.
2. சு.ஃ.பி இயக்கத்தவர் கடவுளை அழகின் உச்சமாக கருதினர்.
3. மோதி மசூதி முழுவதும் பளிங்குக் கல்லால் கட்டப்பட்டது.
4. ஷெர்சாவின் நாணய முறை, ஆங்கிலேயரின் நாணய முறைக்கு அடித்தளமிட்டது.
5. சிவாஜியின் வருவாய் நிர்வாகம் மனிதாபிமானம் சார்ந்து, உற்பத்தி செய்பவர்களுக்கு சாதகமாக அமைந்திருந்தது
6. ஆங்கிலேயர் மராத்தியருடன் நட்புறவு கொண்டு தக்காணத்தில் தடையில்லா வணிகம் செய்யும் உரிமை பெற்றனர்.

7. முகலாயப் பேரரசின் வலிமை குறித்தும், பொருளாதார வளம் பற்றியும் ஐரோப்பியர் நன்கு அறிந்திருந்தனர்.

8. நறுமணத்தீவுகளில் டச்சுக்காரர் வெற்றிபெற்றனர்.

9. கோல்பெர் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டதற்க காரணமாக இருந்தார்.

10. புதுச்சேரியில் இன்றளவும் பிரெஞ்சுத் தாக்கத்தைக் காணமுடிகிறது.

11. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுநர் அதன் இயக்குநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

12. திப்புவின் ஆட்சியை அகற்றியதும் மைசூரில் மீண்டும் உடையார் வம்ச ஆட்சி நிறுவியதும் தென்னிந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி அட்சியின் ஆரம்பத்தைக் குறிக்கிறது.

13. அகமதியர்கள் பொதுவான மசூதியில் தங்கள் வழிபாட்டினை மேற்கொண்டனர்.

www.Padasalai.Net

**III.** *கீழ்கண்டகூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு*

*1.* **(i)** *முதலாம் முகமது ஏற்படுத்திய சிறந்தஅரசு அவருக்குப் பின் வந்தசுல்தான்களாலும் மராத்தியர்களாலும் பின்பற்றப்பட்டது.*

**(ii)** *கவான் போர்த்துக்கிசிய வேதியியல் நிபுணர்களைக்கொண்டு வெடிமருந்தைத் தயார் செய்வது, பயன்படுத்துவது ஆகியவற்றைக்கற்றுதரச் செய்தார்.*

*அ)* **(i)** *மற்றும்* **(ii)** *சரி ஆ)* **(i)** *மற்றும்* **(ii)** *தவறு இ)* **(i)** *சரி* **(ii)** *தவறு ஈ)* **(i)** *தவறு* **(ii)** *சரி*

விடை ஆ) *ஆ)* **(i)** *மற்றும்* **(ii)** *தவறு*

**2. (i)** *ராணா சங்காவின் மூர்க்கமான வலிமைவாய்ந்தபடைகள் பாபரின் சக்திவாய்ந்த படையை எதிர்கொண்டது.*

**(ii)** *கன்னோசிப் போருக்குப்பின் அக்பர் நாடு இல்லாதஒரு இளவரசர் ஆனார்.*

*அ)* **(i)** *சரி ஆ)* **(ii)** *சரி இ)* **(i)** *சரி* **(ii)** *தவறு ஈ)* **(i)** *மற்றும்* **(ii)** *சரியானவை*

விடை இ. (i) சரி (ii) தவறு

3. (i) ஷெர்ஷா மேற்கில் உள்ள சிந்து முதல் வங்காளத்தில் உள்ள சோனர்கான் வரையிலான கிராண்ட் டிரங்க் சாலையை சீர்படுத்தினார்.

(II) அக்பர் தனது மிகப் பெரிய படையெடுப்புகளின் மூலமாக மாபெரும் பேரரசிற்கு அடித்தளம் இட்டார்.

அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (i) மற்றும் (ii) சரியானவை ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

விடை ஈ. (i) மற்றும் (ii) தவறானவை

4. (i) சிவாஜியின் கீழிருந்த நீதி நிர்வாகம் பழமையான ஒன்றாகும்.

(ii) நிலையான நீதிமன்றங்களும் விதிமுறைகளும் இருந்தன.

அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (i) மற்றும் (ii) சரி ஈ) (i) மற்றும் (ii) தவறு

விடை = அ (i) சரி

www.Padasalai.Net

5. (i) வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியின் பாதுகாப்பை வீழ்ந்து கொண்டிருந்த முகலாயப் பேரரசு நழுவவிட்டது.

(ii) இது நாதிர் ஷாவின் படையெடுப்பிற்கு வழிவகுத்தது

அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (i) மற்றும் (ii) சரியானவைஈ) (i) மற்றும் (ii) தவறானவை

விடை = இ (i) மற்றும் (ii) சரியானவை.

6. (i) பிளாசிப் போர், வணிகநிறுவனமாகஇருந்த ஆங்கிலேயக்கிழக்கிந்தியக்கம்பெனியை வங்காளத்தின் மீது இறையாண்மை கொண்ட அரசியல் சக்தியாகமாற்றியது.

(ii) பெரும் நிலப்பரப்பைஆட்சிசெய்த இங்கிலாந்து வந்தவாசிப் போருக்குப்பின் வணிக நிறுவனத்தை ஆளுகின்ற சக்தியாக எழுச்சி பெற்றது.

அ. (i) சரி ஆ. (ii) சரி இ. இரண்டும் சரி ஈ. இரண்டும் தவறு

விடை = அ (i) சரி

7. (i) அல்புகர்க் இந்தியாவில் போத்துகீசியப் பேரரசை உண்மையில் நிறுவியவர் ஆவார்.

(ii) உடன்கட்டை ஏறும் வழக்கத்தைநிறுத்த அல்புகர்க்முயன்றார்.

அ. (i) சரி ஆ. (ii) தவறு இ. இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

விடை = இ இரண்டும் சரி

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## II. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு

*1.* **கூற்று(கூ): பாமன் ஷா *மிகச்சரியாகத் தாக்குதல்* தொடுத்து வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்ட வீடு ஆகியன மீது ஆதிக்கம் செலுத்தி ஆண்டு தோறும் திறைசெலுத்தவைத்தார்.**

**காரணம் (கா): இது அடிக்கடி போர்கள் ஏற்பட வழி வகுத்தது.**

*அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமன்று*

*ஆ) கூற்று சரி, காரணம் தவறு*

*இ) கூற்றும் தவறு காரணமும் தவறு*

*ஈ) கூற்று சரி, காரணத்திற்கு கூற்று சரியான விளக்கமாகும்*

**( விடை ஈ) *கூற்று சரி, காரணத்திற்கு கூற்று சரியான விளக்கமாகும்***

www.Padasalai.Net

2. **கூற்று : மத சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.**

**காரணம் : அவர்கள் சிலை வழிபாட்டை விமர்சித்தனர்.**

*அ. கூற்று சரி; காரணம் கூற்றின்சரியானவிளக்கம் அல்ல.*

*ஆ. கூற்று தவறு; காரணம் தவறு.*

*இ. கூற்று சரி; காரணம் கூற்றின்சரியானவிளக்கம் ஆகும்.*

*ஈ. கூற்று தவறு; காரணம் சரி.*

**விடை இ) கூற்று சரி; கராணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்**

3. **கூற்று (கூ):** *பாபர் முதலாம் பானிப்பட்* **போ***ரில் வெற்றி பெற்றார்.*

**காரணம் (கா):** *பாபர் பீரங்கிப் படையை* **போ***ரில் பயன்படுத்தினார்.*

*அ. கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.*

*ஆ. கூற்று தவறு; காரணம் சரி*

*இ. கூற்று தவறு; காரணமும் தவறு*

*ஈ. கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல*

**விடை** அ. கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

4. **கூற்று (கூ):** ஔரங்கசீப்பின் ஆட்சியின் இறுதியில் முகலாயப் பேரரசின் அழிவு ஆரம்பமாயிற்று
**காரணம் (கா):** ஔரங்கசீப் தக்காண அரசர்களிடம் நட்புறவாக இருந்தார்.

அ. கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

ஆ. கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

இ. கூற்றும் தவறு; காரணம் சரி

ஈ. கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

**விடை** அ. கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

5. **கூற்று (கூ):** மூன்றாம் பானிப்பட் போர் ஆங்கிலேயரின் அதிகார எழுச்சிக்கு வழிவகுத்தது.
**காரணம் (கா):** இத்தோல்வி மராத்தியருக்கும் முகலாயருக்கும் ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

அ. கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஆ. கூற்று சரி; காரணம் தவறு

இ. கூற்று மற்றும் காரணம் தவறானவை

ஈ. கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விடை** இ. கூற்று மற்றும் காரணம் தவறானவை

www.Padasalai.Net

6. **கூற்று (கூ):** காலாட்படை வீரர்கள் மஹாராஷ்டிராவிலிருந்து மட்டும் தேர்வு செய்யப்பட்டனர்.
**காரணம் (கா):** மராத்தியர் குதிரைப்படையில் பணியாற்றவிரும்பினர்.

அ. கூற்று தவறு; காரணம் சரி

ஆ. கூற்று சரி; காரணம் கூற்றினைவிளக்குகிறது

இ. கூற்று மற்றும் காரணம் தவறானவை

ஈ. கூற்று மற்றும் காரணம் சரியானவை

**விடை** ஈ. கூற்று மற்றும் காரணம் சரியானவை

7. **கூற்று:** பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பியர் இந்தியாவிற்கு வருகைதந்தனர்.
**காரணம்:** அவர்களது உண்மையான நோக்கம் ஐரோப்பியச் சந்தைக்குத் தேவையான மிளகு இலவங்கம் கிராம்பு ஏனைய நறுமணப் பொருட்களைக் கொள்முதல் செய்வதாகும்.

அ. கூற்று சரி: காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஆ. கூற்று சரி: காரணம் தவறு

இ. கூற்று தவறு: காரணம் சரி

ஈ. கூற்று சரி: காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விடை** இ. கூற்று தவறு: காரணம் சரி

8. **கூற்று:** இந்தியா பொருள் உற்பத்திக்கான வலுவான தளத்தையும் குறிப்பாகப் பருத்தியிழைத் துணிகளுக்காகவும் புகழ்பெற்றிருந்தது

**காரணம்:** நாட்டின் முதல் முக்கியமான பொருளாதார நடவடிக்கைவிவசாயம் ஆகும்.

அ. கூற்று மற்றும் காரணம் சரி

ஆ. கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

இ. கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

ஈ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

**விடை** இ. கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

www.Padasalai.Net

9. **கூற்று (கூ):** ஆங்கிலேய அரசு அணைகளைக் கட்டுவதற்கான பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டது.

**காரணம் (கா):** 19ஆம் நூற்றாண்டில் தொடர்ச்சியாகக் கடைசி கால் நூற்றாண்டில் அதிகமான பஞ்சங்கள் நிலவின.

அ. கூற்று சரி காரணம் தவறு

ஆ. கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

இ. கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஈ. கூற்று தவறு காரணம் சரி

**விடை** ஈ. கூற்று தவறு காரணம் சரி

10. **கூற்று (கூ):** சிவகிரி கோட்டைத் தாக்குதல் மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பானதாக இருந்தது.

**காரணம் (கா):** மேற்குத்தொடர்ச்சி மலைஅடிவாரத்தில் வலுவான அரண்களோடு அது அமைக்கப்பட்டிருந்தது.

அ. கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம்அல்ல.

ஆ. கூற்று மற்றும் காரணம் தவறானவை.

இ. கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம்ஆகும்.

ஈ. கூற்று தவறு காரணம்சரி.

**விடை** இ. கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

11. **கூற்று (கூ):** *சையது அகமது கான் அலிகரில் நிறுவிய நவீனப்பள்ளி பின்னர் முகமதிய ஆங்கிலோ-ஓரியண்டல் கல்லூரியாக வளர்ச்சி பெற்றது.*

**காரணம் (கா):** *முஸ்லீம்கள் ஆங்கிலக்கல்வி கற்பதைஅவர்விரும்பினார்.*

*அ. கூற்று சரி காரணம் கூற்றின்சரியான விளக்கம் ஆகும்.*

*ஆ. கூற்று தவறு காரணம் தவறு.*

*இ. கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானவை.*

*ஈ. கூற்று சரி காரணம் கூற்றின்சரியான விளக்கம் அல்ல.*

**விடை** *அ. கூற்று சரி காரணம் கூற்றின்சரியான விளக்கம் ஆகும்.*

100 சதவீதம் மதிப்பெண் பெற தினமும் ஒரு மதிப்பெண் வினாவை வாசித்தால் மட்டும் போதும். மனதில் தங்கி விடும். மதிப்பெண் தானாகவே வந்து விடும். வாசிக்க 20 நிமிடங்கள் போதும்.

முழு மதிப்பெண் பெற வாழ்த்தும்

சு.சண்முகசுந்தரம்

முதுகலை ஆசிரியர் (வரலாறு)

பாரதியாயா வித்யாலயம் மேல்நிலைப்பள்ளி,

தூத்துக்குடி

www.Padasalai.Net

## பதினொராம் வகுப்பு இரண்டாம் தொகுதி

## சு. சண்முகசுந்தரம் முதுகலை ஆசிரியர் பாரதியார் வித்யாலயம் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி

குருகிய விடையளி (மூன்று மதிப்பெண் வினாக்கள்) (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

( ஆசிரியர் மற்றும் மாணவர் புரிந்து கொள்வே அதிக குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது )

1. பாமினி அரசு எவ்வாறு நிறுவப்பட்டது? யாரால் நிறுவப்பட்டது?

    1. டெல்லியை முகமது பின் துக்ளக் ஆண்டபோது 1345 ல் தென் பகுதி மாகாண ஆளுநர் ஜாபர்கான் ஆவார்.
    2. வடக்கு கர்நாடகாவில் தன்னை சுதந்தர அரசாக அறிவித்தார்.
    3. தனக்கு பான்ஷா என்ற பட்டத்தை சூட்டி பாமினி அரசை தோற்றவித்தார்.

2. நாயக்க முறை (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)
    1. நாயக் என்றால் இராணுவத்தலைவர் அல்லது இராணுவ வீரர் என்ற பொருள்படும்.
    2. இராணுவச் சேவைக்கு பதிலாக வருவாய் ஈட்டித் தரும் நிலப்பகுதிகள் வழங்கப்பட்டன.
    3. குறிப்பிட்ட எண்ணிக்கையில் குதிரை, கலாட்படைவீரர்களை பராமரிக்க வேண்டும்.
    4. தேவைப்படும் நேரத்தில் இராணுவச் சேவை செய்யவேண்டும்.
    5. இராமநவமி திருவிழா நேரத்தில் குறிப்பிட்ட வருவாயை வழங்கவேண்டும்.
    6. நாயக் தானம் எனப்பட்ட தங்களின் பகுதிகளில் உற்பத்தியை கட்டுப்படுத்தினர்.
    7. விவசாயிகள் கைவினைஞர்களுக்கு சலுகைகள் வழங்கினர். அரசரின் பிரதிநிதியாக செயலாற்றினர்.

www.Padasalai.Net

3. ராக்சஷி தங்கடி போர்(1565) (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

    1. விஜய நகர அரசுக்கும் பாமினி தக்காண சுல்தான்கள் கூட்டணிப்படைக்கும் இடையே எற்பட்ட போர் ஆகும்.
    2. விஜய நகர படைக்கு ராமராஜா தலைமை வகித்தார்.
    3. 1565ல் தலைக் கோட்டையில் இப்போர் நடந்தது.
    4. போரின் இறுதியில் விஜயநகரப் படைகள் தோல்விஅடைந்தது.
    5. இப் போர் விஜயநகரப் பேரரசின் முடிவுக்கு காரணமாய் அமைந்தது.

4. கிருஷ்ணதேவராயர் விஜயநகரப் அரசின் சிறந்த ஆட்சியாளராகப் போற்றப்படக் காரணங்கள் யாவை? (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

    1. கிருஷ்ண தேவராயர் பெற்ற வெற்றிகள் (பாமினி சுல்தான்கள் மற்றம் ஒரிசாவின் கஜபதியை வெற்றி கொள்ளல்).
    2. போர்ச்சுக்கிஷியர்களுடன் வணிக உறவு (குதிரை பெறல்)
    3. சைலம், திருப்பதி, காளகஸ்தி போன்ற புனித தலங்களுக்கு நன்கொடை, கோபுரங்கள் கட்டியது.
    4. ஆட்சியில் செல்வச் செளிப்பு, அரசவையிலய் அல்லசானி பெத்தன்னா, தெனாலிராமன் அலங்கரித்தது.
    5. தலை சிறந்த சாதனையாளர். அமுக்த மால்யதம் என்ற நூலை இயற்றியவர். சிறந்த கவிஞர்.
    6. சிறந்த நிர்வாகி நாயக் முறையை மறுசீரமைப்பு கொடுத்தார்.

4. இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டவர் யார் ஏன்?

1. இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டவர் பாமன்ஷா ஆவார்.
2. வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளை வெற்றி கொண்டு அவர்களை கப்பம் கட்ட வைத்தார்.
3. தனது நாணங்களில் இரண்டாம் அலெக்சாண்டர் என்று பொறித்துக் கொண்டார்.

5. கோல்கொண்டா கோட்டை எங்கே கட்டப்பட்டது? அதன் அமைப்பை விவரி? (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. வாரங்கல்லை தலைநகராக கொண்ட காக்கத்திய வம்ச அரசர் ராஜா கிருஷ்ணதேவ் கட்டிய கோட்டை.
2. ஹைதராபத்தில் இருந்து 11 கி.மீ தொலைவில் உள்ள மலையில் 120 மீட்டர் உயரத்தில் உள்ளது.
3. ஒலி அம்ச அடிப்படையில் சிறந்த கட்டிடக்கலையின் அம்சமாகும்
4. அரசவை, நிலத்தடி ரகசிய சுரங்கபாதை, மாளிகை அமையப்பெற்றது.
5. கோகினூர் வைரத்தை உலகிற்கு வழங்கியது.
6. குதுப்ஷாவின் கல்லறை உள்ளது. இதில் இரு தனி வழிகள் உள்ளன.
7. நுழைவுப்பகுதி பதேர்வாசா (வெற்றி நுழைவு வாசல்) எனவும். கோட்டையின் உயர்ந்த பகுதி பாலா ஹிசார் எனவும் அழைக்கப்படுகிறது.

www.Padasalai.Net

7. மத மருமலர்ச்சியின் உறைவிடமாக தென்னிந்தியா விளங்கியதை விளக்குக

1. பக்தி இயக்கம் என்னும் வடிவில் புதிய சமய மரபு தோன்றியது.
2. ஆதிசங்கரர் அத்வைத கருத்தை எடுத்து கூறி பிற மத கோட்பாட்டை எதிர் கொள்ளும் ஆற்றலை வழங்கினார்.
3. இராமானுஜர், சமத்துவத்திற்கு ஆதரவளித்து அதனை இயக்கமாக மாற்றினார்.
4. சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள், பக்தி இயக்கத்தில் பாடல்கள் பாடி மக்களோடு மக்களாக கலந்தனர்.

8. சுர்தாஸ், துக்காராம் ஆகியோரின் போதனைகளை ஆய்க.

சுர்தாசர்:

1. அக்பர் அவையில் இடம் பெற்றவர் சூர்தாசர்.
2. அன்பேனும் மதத்தையும், கடவுளிடம் பக்தி கொள்வதையும் போதித்தார்.
3. கிருஷ்ணபக்தி பாடல்களை பாடி அவர் மீது காதலை வெளிப்படுத்தினார்.

துக்காராம்:

1. சிவாஜியின் சமகாலத்தவர் துக்காராம்.
2. கடவுளான பந்தபூர் விட்டலாவின் புகழை பாடினார்.
3. சமத்துவம் சகோதரத்துவத்தை பரப்பினார்.

9. கபிரின் போதனைகளை விவரி?

1. கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்றார்.
2. உருவ வழிபாடு, பல கடவுள் வழிபாடு, சாதி முறையை எதிர்த்தார்.
3. இஸ்லாமிய சமயத்திலிருந்த சம்பிரதாயங்களை எதிர்த்தார்.
4. இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு வழிவகுத்தார்.

10. கபீரிடமிருந்து சைதன்யர் எவ்வாறு வேறுபடுகிறார்?

1. கபீரை போலல்லாமல் சைதன்யர் எனைய கடவுள்களை காட்டிலும் கிருஷ்ணர் உயர்வானவர் என கூறினார்.
2. கபீரின் இயக்கம் ஒருமைப்பாட்டை வலியுருத்தியது. சைதன்யர் இயக்கம் ஒரு மீட்டேடுப்பு இயக்கமாகும்
3. கிருஷ்ண வழிபாட்டுக்கு சைதன்யர் முக்கியத்துவம் தந்தார்.

11. பக்தி இயக்கத்தின் விளைவுகள்

1. முக்தி என்பது அனைவருக்கும் உரியது என்ற கருத்தை முன்வைத்தது.
2. பிராந்திய மொழிகளில் இயக்கங்களும், தலைவர்களும் தோன்றினர்
3. ஆத்வைதம், துவைத கோட்பாடுகள் தோன்றின.
4. அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுவது, பண்டிகைகள் விழாக்கள் நடத்துவது, புனித பயணங்கள் மேற்கொள்வது இன்று வரை நடைமுறையில் உள்ளன.

www.Padasalai.Net

12. "வாழ்கை முழுவதும் தவறி விழுந்த ஹுமாயுன் வாழ்க்கையை விட்டே தவறி விழுந்து இறந்தார்" விவரிக்கவும்

1 சுனார் கோட்டை முற்றுகையின் போது ஷெர்ஷாவின் வார்த்தையை நம்பி முற்றுகையை கைவிட்டது.
2. பஞ்சாப் மீதான கம்ரானின் ஆட்சியதிகாரத்தை தட்டிக் கேட்க மறுத்தது.
3. எதிரிகள் தங்களை வலிமைப்படுத்திய நேரத்தில் அதில் கவனத்தை செலுத்தாமல் தில்லியில் பொழுதை கழித்தது.
4. நூலகதின் படிகட்டில் இருந்து விழும்போது மட்டும் அல்ல எப்பொழுதெல்லாம் வாய்ப்பு கிடைத்ததோ அப்பொழுதெல்லாம் (அரசில்) கிழே விழத் தவறவில்லை.

13. தீன் இலாஹி பற்றி நீவிர் அறிவது யாது?

1 அனைவருக்கும் அமைதி என்ற தத்துவத்தை நிலை நாட்ட அக்பர் விரும்பினார்.
2 தீன் இலாஹி என்ற தெய்வீக ஒரு கடவுள் கோட்பாட்டை அக்பர் தொடங்கினார்.
3 அக்பருக்கு பின் தீன் இலாஹி இல்லாமற் போயிற்று.

14. அக்பரது சித்தூர் முற்றுகை

1 அக்பர் மேவார் ராணா உதய்சிங்கின் சித்தூர் கோட்டை முற்றுகை ஆறுமாதம் நீடித்தது.
2 ராணா உதங்சிங் குன்றுகளுக்குள் பின்வாங்கினாலும் அவரின் தளபதிகள் ஜெய்மால் பட்டா ஆகியோர் போரை தொடர்ந்து நடத்தினர்.
3 ஜெய்மால், பட்டா உள்பட 30,000 ராஜபுத்திர வீரர்களின் தியாகத்திற்கு பின்னரே கோட்டை கைப்பற்ற பட்டது.
4 அக்பர் அவர்களது துணிச்சலைக் கண்டு வியப்படைந்து அவர்கள் நினைவாக ஜெயமால் பட்டா இருவரது சிலைகளை நிறுவினார்.

15. அக்பரது மன்சப்தார் முறை

1 ஒரு முறைபடுத்தப்பட்ட மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறையான மன்சப்தாரி முறையை அறிமுகம் செய்தார்.
2 தலைமை பதவி பெற்ற பிரபுக்கள் ஒவ்வொருவருக்கும் மன்சப்தார் என்ற பட்டம் வழங்கப்பட்டது.
3 ஜாட் என்பது மன்சப்தார் பெற்ற வீரர்களின் எண்ணிக்கை
4 சவார் என்பது மன்சப்தார்களின் கீழ் இருக்கும் குதிரைகளின் எண்ணிக்கை
5 ஜாட் சவார் எண்ணிக்கையைப் பொருத்தே ஒருவரது அந்தஸ்து நிர்ணயிக்கப்பட்டது.

16. முகலாயர் ஆட்சியில் நிறுவப்பட்ட ஐரோப்பிய குடியேற்றங்கள்

| | | |
|---|---|---|
| போர்ச்சுகிசியர் | -- | கோவா, டாமன், சால்செட், |
| டச்சுக் காரர் | -- | மசுலிப்பட்டனம், புலிகாட் |
| டேனியர் | -- | தரங்கம்பாடி |
| பிரெஞ்சுக்காரர் | -- | சூரத், புதுச்சேரி |
| ஆங்கிலேயர் | -- | சூரத், சென்னை, பம்பாய், கல்கத்தா |

www.Padasalai.Net

17. தாராஷுகோ

1 ஷாஜகானின் முத்த மகன்
2 சுபி தத்துவத்தில் ஆர்வம் கொண்டிருந்தார்.
3 ஷாஜகானால் பட்டத்து இளவரசனாக அறிவிக்கப்பட்டவர்.
4 உபநிடதங்களை மாபெரும் ரகசியம் என்னும் பெயரில் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்

18. கர்கானா

1 தொழிற்கூடம்.
2 இங்கு விலையுயர்ந்த கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன
3 அரசகுடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்த அரசாங்க கர்கானாக்களும் இருந்தன.
4 இங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வர்த்தகர்களால் உள்ளூர் மற்றும் தொலை பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

19. கபீர்

1 கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்றார்.
2 உருவ வழிபாடு, பல கடவுள் வழிபாடு, சாதி முறையை எதிர்த்தார்.
3 இஸ்லாமிய சமயத்திலிருந்த சம்பிரதாயங்களை எதிர்த்தார்.
4 இந்து - மூஸ்லிம் ஒற்றுமைக்கு வழிவகுத்தார்.

20. அபுல்பாசல்

1 அக்பர் நாமா என்ற நூலின் ஆசிரியர் அபுல் பாசல் ஆவார்.
2 இதில் அக்பர் வாழ்கை வரலாற்றை எழுதியுள்ளார்
3 அயினி அக்பரி என்ற நூலில் முகலாய நிர்வாகத்தைப் பற்றி விவரித்துள்ளார்.

21. சூபி இயக்கம்

1 இஸ்லாமின் உள்ளுணர்வு சார்ந்த இறைநிலை இணைப்பினை முன்வைக்கும் ஒரு மதக் கோட்பாடு.
2 ஈரானில் உதயமானது இந்தியாவில் செழித்து வளர்ந்தது.

22. மராத்தியரின் எழுச்சிக்கான காரணங்கள் (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. மராத்தியரின் விசுவாசம், வீரம், ஒழுக்கம், தந்திரம், எதிரிகளைத் தாக்கும் ஆற்றல்
2. புவியியல் கூறுகளான செங்குத்தான மலைகள், பள்ளத்தாக்குகள், கோட்டைகள் இராணுவப் பாதுகாப்புக்கு எற்றவகையாக இருந்தது.
3. கொரில்லா தாக்குதல், இரவு நேர மின்னல் தாக்குதல்.
4. போர்ச்சூழல் கருத்தில் கொண்டு மேலதிகாரியின் உத்தரவின்றி வழிமுறைகளைப் மாற்றிச் செயல்படுதல்.
5 பக்தி இயக்கம் மராத்தியரை ஒன்றபடுத்தியது.

www.Padasalai.Net

23. சிவாஜியின் கீழ் இருந்த இராணுவ அமைப்பு (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. நிலையான இராணுவம் இருந்தது
2. படைவீரர்களுக்க வீடு வழங்கப்பட்டது.
3. காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, ஆயுதப்படை என நான்கு பிரிவகள் இருந்தன.
4 ரெஜிமெண்ட், பிரிகேடுகள் என கலாட்படை பிரிக்கப்பட்டிருந்தது.

24. மூன்றாவது பானிபட் போரின் விளைவுகள் (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1 மராத்திய இராணுவம் முற்றிலுமாக அழிந்தது.
2 அகமது ஷா அப்தாலி டில்லியின் மன்னரானார்.
3 மராத்தியரின் பேரரசு கனவு சிதைந்தது.
4 இந்தியாவில் ஆங்கிலேய அரசு காலூன்ற வழிவகுத்தது.

25. 1775-1782 இல் நடைபெற்ற போர்( முதலாவது ஆங்கிலோ மராத்தியப் போர்)

1 ரகுநாதராவ்வின் உரிமை காரணமாக நடைபெற்ற இப்போர் சால்பாய் உடன்படிக்கை படி முடிவுக்கு வந்தது.
2 சால்செட், தானே ஆகிய பகுதிகள் ஆங்கிலேயருக்கு கிடைத்தது.
3 ரகுநாதராவுக்கு கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டது.

26. மூன்றாவது மராத்தியப் போரின் விளைவுகள் (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1 மராத்திய கூட்டமைப்பின் தலைமைப் பகுதியில் இருந்து பேஷ்வா விலகல்
2 பேஷ்வாவின் அனைத்துப் பகுதிகளையும் ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டனர்.
3 சிவாஜியின் வழித் தோன்றல் பிரதாப்சிங்கிற்கு சதராவில் சிறிய அரசு வழங்கப்பட்டது.
4 இரண்டாம் பாஜிராவ் கடைசி வரை சிறைக்கைதியாக ஒய்வூதியத்துடன் வாழ்ந்தார்.

27. நயங்காரா முறை

1 கிருஷ்ணதேவராயர் நயங்காரா முறையை உருவாக்கினார்.
2 இதன்படி தமிழகம் மதுரை செஞ்சி தஞ்சாவூர் என மூன்று நயங்கராக்களாக உருவானது.
3.1676 ல் மராத்திய தளபதி வெங்கோஜி தன்னை தஞ்சையில் அரசராக அறிவித்தார்.

28. ராஜா தேசிங்கின் வீரதீரச் செயல்கள் (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)
1 1714 இல் செஞ்சியின் ஆளுநரானார்.
2 முகலாய மன்னருக்கு கப்பம் கட்ட மறுத்தார்.
3 நவாப்புக்கு எதிரான சண்டையில் 22 வயது ஆன ராஜா தேசிங் வீர மரணமடைந்தார்.
4 ராஜா தேசிங் நவாபுக்கு எதிராக வெளிப்படுத்திய வீரம் மக்களிடையே கதை பாடல்களாக உருவமெடுத்தது.

29. 'நவ வித்யா முறையை அறிமுகம் செய்தது ஒரு முக்கிய முன் முயற்சியாகும்' - எவ்வாறு?

www.Padasalai.Net

1 தஞ்சாவூரில் கிறிஸ்தவர் அல்லாத உள்ளூர் குழந்தைகளுக்காக நவீன பொதுப் பள்ளிகளை முதன் முதலாக தொடங்கினார்.
2 ஆதரவற்றவர்கள் மற்றும் ஏழை மாணவர்களுக்காக தஞ்சை மற்றும் இதர இடங்களில் இலவச தொடக்க மற்றும் உயர் கல்வி நிலையங்களை நிறுவி நிர்வகித்தார்.
3 நவீன கல்வி முறைக்காக 'நவ வித்யா' என்ற முறையை மேற்படி பள்ளிகளில் அறிமுகம் செய்தார்.

30. 1565 ஆம் ஆண்டுக்குப் பிறகு தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளைக் கூறு? (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)
1. 1565 ல் நடைபெற்ற தலைக் கோட்டைப் போருக்குப் பின் விஜய நகரப் பேரரசு வலிமை குன்றியதால் அதன் கீழ் இருந்த நாயக்க அரசுகள் நடை முறையில் சுயாட்சி பெற்றவைகளாக விளங்கின.
2. நாயக்கர் தவிர பல்வெறு பகுதிகள் உள்ளூர் ஆட்சியாளர்கள் வசம் இருந்தது. அவர்களில் இராமநாதபுரம் அரசின் சேதுபதி முக்கியமானவராவார். அவரும் தன்னை சுதந்திர அரசராக நிலை நிறுத்திக் கொள்ள விரும்பினார்.
3. இச் சூழ்நிலையில் தங்களுக்குள் மேலாதிக்கத்தை நிறுவ இவ் வரசுகள் 1590 முதல் 1649 க்குமிடையே தங்களுக்குள் மோதிக் கொண்டன. விஜய நகரப் பேரரசுக்கு எதிராக கிளர்ச்சிகளும் எற்பட்டன.
4. இச் சூழ்நிலையில் 1646 ல் கோல்கொண்டா படைகள் சோழ மண்டலத்திற்குட்பட்ட பழவேற்காட்டிற்கும் சாந்தோமுக்கும் இடைபட்ட பகுதிகளை கைபற்றிக் கொண்டன.
5. இக்கால கட்டத்தில் டச்சுக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயர் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் சில இடங்களை தங்களுக்கு சொந்தமாக பெற்று அவற்றின் மேல் தங்கள் உரிமையை நிறுவினர்.

31. வணிகர்கள் ஒரே வகையான குழு அல்ல என்பதை விளக்குக.. (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)
1. பல்வேறு குழுவைச் சேர்ந்தவர்களாக வணிகர்கள் இருந்தனர்.
2. கீழ் நிலையில் சிறிய சந்தைகளில் வியாபாரிகளும் சில்லரை வர்த்தகர்களும் இருந்தனர்.
3. இடைநிலையில் தரகர்கள் இருந்தனர். நாட்டின் உட்பகுதிகளில் உற்பத்தியாகும் பொருட்களை கொள்முதல் செய்தனர்.
4. மேல் நிலையில் வணிகத்தை கட்டுப்படுத்திய பெரும் வர்த்தகர்கள் இருந்தனர். இவர்கள் வணிக இளவரசர்கள் அல்லது முதலாளிகளாக இருந்தனர். சூரத்தில் பனியா,பார்சி வணிகர்கள், அகமதாபாத்தின் நகர்சேத்துகள், வங்காள ஜெகத் சேத்துகள், சோழ மண்டலத்து நகரத்தார் ஆகியோரை எடுத்துக் காட்டாய் கூறலாம்.

32. கிழக்குக் கடற்கரையில் ஐரோப்பியர் தங்களது குடியேற்றங்களை நிறுவக் காரணம் என்ன? (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)
1. நறுமணப் பொருட்களை உற்பத்தி செய்யும் இந்தோனிசியத் தீவுகளுடனான வணிகத்திற்குத் தேவைப் படும் சில்லரைப் பொருட்களை கொள்முதல் செய்யத் தங்களுக்கு சோழ மண்டலக்கடற்கரையில் வணிகத்தளம் தேவை என் ஐரோப்பியர் உணர்ந்தனர்.
2. இந்தியத் துணிகள் செலாவணி ஊடாகமாயிற்று.
3. சோழ மண்டலத்தைச் சேர்ந்த வண்ணம் பூசப்பட்ட துணிகளுக்கான தேவை ஐரோப்பியரை கிழக்கு கடற்கரையில் தங்கள் வணிக நிறுவனங்களை அமைத்துக் கொள்ளச் செய்தது.
4. துணிகளை கொள்முதல் செய்து அவற்றை இலாபகரமான நறுமணப் பொருட்களாகப் பண்டமாற்று செய்து கொண்டனர்.

33. இந்தியத் துணிகளுக்கான தேவை ஐரோப்பாவில் அதிகரித்ததோடு அது இந்தியப் பொருளாதாரத்தின் மீது எவ்வாறு தாக்கத்தை எற்படுத்தியது? (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)
1. ஐரோப்பாவில் இந்திய துணிகளுக்கான தேவை அதிகரித்ததால் அது இந்திய பொருளாதாரத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
2. தொடக்கத்தில் இத் தேவை அதிகரிப்பு உள்ளுர் பொருளாதாரத்திற்குப் பயனளிப்பதாக அமைந்தது.
3. உற்பத்திக் காரணிகள் (தொழிலாளர், கச்சாப் பொருள், மூலதனம்) நேர்மறையாக வினையாற்றின.
4. ஐரோப்பாவின் தேவை தொடர்ந்து அதிகரித்தபோது உற்பத்திக்காக கொடுக்கப்பட்ட நெருக்கடி மிக விரைவாக உற்பத்தி ஆதாரங்களைப் பாதித்தது.
5. தெற்கே அடிக்கடி ஏற்பட்ட பஞ்சங்களும், கச்சாப் பொருட்களுக்கும் உணவு தானியங்களுக்கு எற்பட்ட பற்றாக்குறையையும் நெசவாளர்கள் கூடுதலாக ஏற்க வேண்டிய சுமைகளாயின.
6. அதிகமான வணிக வாய்ப்புகள் குறுகிய காலத்திற்குப் பயனளித்தாலும் நீண்டகாலவிளைவென்பது அவ்வாறு இருக்கவில்லை.
7. இந்த 150 வருட காலத்தில் வணிகராக இந்தியா வந்த ஆங்கிலேயர் வணிகப் பேரரசை நிறுவியவர்களாக மாறி இறுதியில் நாட்டின் பெரும் பகுதி ஆட்சியாளராக மாறி இந்திய கைத்தொழிலை அழித்து தற்சார்பு விவசாயத்தை பாதிக்க செய்து நாட்டின் செல்வ வளத்தை சுரண்டும் ஆட்சியாளராக மாறினர்.

34. *பழவேற்காடு* (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. பழவேற்காடு சென்னையில் இருந்து 60 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது
2. பழவேற்காட்டை போர்த்துகீசியரிடமிருந்து டச்சுக்காரர்கள் கைப்பற்றினர்.
3 டச்சுக் காரர்கள் அங்கு ஜெல்டிரியா என்னும் பாதுகாப்பு கோட்டையை கட்டினர்.
4. இக்கோட்டை 400 ஆண்டுகள் கடந்தும் அதன் எச்சங்கள் இன்றும் உள்ளது.
5 இங்கிருந்து வைரம், ஜாதிக்காய், ஜாதிபத்ரி, கிராம்பு ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.
6. 17ம் நூற்றாண்டில் டச்சுக்காரர் கிழக்குப் பகுதிகளை கட்டுப்படுத்துவதற்காக வெடி மருந்து தொழிற்கூடம் ஒன்றை நிறுவினர்.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

35. தரங்கம்பாடி (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. 1620 ல் வணிக இயக்குநர் ராபர்ட் கிராப்பி தஞ்சாவூர் அரசோடு ஓர் ஒப்பந்தத்தை செய்து கொண்டார்.
2. ஒப்பந்தப்படி தரங்கம்படியில் டேனியர்கள் கோட்டை கட்டிக் கொள்ள உரிமையை பெற்றனர்
3. பல புதிய வணிக முகாம்கள் அமைக்கப்பட்டன.
4. தரங்கம்பாடியில் டேனியர் கட்டிய கோட்டை இன்றும் சீர் கெடாமல் உள்ளது.
5. லுத்தரன் மதப்பரப்பாளர்களான பார்த்தலோமியஸ் சீகன் பால்கு, ஹென்ரிச் புலுட்சா ஆகிய இருவரும் இங்கு வந்து இந்துக்களை கிறிஸ்தவர்களாக மாற்றினர். அச்சுக்கூடம் உருவாக்கி பைபிளை மொழிபெயர்த்தனர்.

36. ஆம்பூர் போர் (1749) (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. ஹைதராபாத் நிஜாமிற்கு எற்பட்ட வாரிசுரிமைப் போட்டி ஆம்பூர் போருக்கு வழிவகுத்தது.
2. ஹைதராபாத் உரிமை கோரிய முஜாபர் ஜங், கர்நாடகத்திற்கு உரிமை கோரிய சந்தாசாகிப் ஆகிய இருவரும் பிரெஞ்சு படை உதவியுடன் அன்வருதீனை தோற்கடித்தனர். போரில் அன்வருதீன் இறந்தார்.
3. சந்தாகாகிப் அற்காடு நவாப் ஆனார்.
4. அன்வருதீன் மகன் திருச்சிக்கு தப்பியோடினார்.

37. "ஆனந்தரங்கர் நாட்குறிப்பு" (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. அனந்தரங்கன் பிள்ளை புதுச்சேரியின் தலைசிறந்த வணிகர்.
2. அனந்தரங்கன் பிள்ளையை துய்ப்ளே தலைமை துபாஷியாகவும் (இரு மொழிகள் அறிந்தவர்) வணிகமுகவராகவும் நியமித்தார்.
3. ஆனந்தரங்க பிள்ளையின் (1709-1761) நாட்குறிப்பு தமிழில் எழுதப்பட்ட ஏராளமான செய்திகளை உள்ளடக்கி உள்ளது.
4. அவரின் நாட்குறிப்பு 1736 முதல் 1760 வரையிலான காலத்திற்கு (துய்ப்ளே ஆளுநராக இருந்த காலம்) முக்கியமான வரலாற்று சான்றாக உள்ளது.
5. இந்நாட்குறிப்பு சமகால நிகழ்வுகள் குறித்த அவருடைய பார்வை மற்றும் அவரது கருத்துக்களின் பதிவாகும்.

38. இரட்டை ஆட்சி முறை

1. பிளாசிப் போருக்கு பின் வணிகக்குழு முழு அதிகாரத்தை தன்வசம் வைத்துக் கொண்டு நிர்வாகச் சுமையை மட்டும் நவாபிடம் விட்டு வைத்தது இத்தகைய நிர்வாக முறையே இரட்டை ஆட்சி முறை எனப்பட்டது.
2. இம்முறையின் கீழ் மேலளவில் ஓர் அதிகாரமற்ற அரசரை வைத்துக் கொண்டு அவரது பின்புலத்தில் வணிககுழு அதிகாரிகள் செயலாற்றினர்.

39. ஜமீன்தார்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிலங்களுக்குப் பரம்பரை உரிமைகளை எவ்வாறு பெற்றனர்?

1. 1793 ல் வங்காளம் பீகார் ஒரிசா ஆகிய பகுதிகளில் நிலையான நிலவரித்திட்டம் அமுல் செய்யப்பட்டது.
2. 'சாசுவதம்' என்ற பெயரில் நிலத்தை அளவிட்டு அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஜமீன்தாரும் அரசுக்கு வழங்க வேண்டிய வருவாயை நிர்ணயம் செய்தது.
3. இம் முறையின் மூலமாக வரி வசூரிப்போராக இருந்தோர் வாரிசுரிமை கொண்ட ஜமீன்தார்களாக மாறி அரசு வழங்கிய நிலத்தின் பயன்களை அனுபவிக்கலானார்கள்.

40. வாரிசு உரிமை இழப்புக் கொள்கை

1. இந்து சம்பிரதாயங்களின்படி வாரிசு இல்லாத இந்து அரசர் ஓர் ஆண் மகவை தத்தெடுக்க முடியும்.
2. அவ்வாறு தத்தெடுக்கப்பட்ட மகனுக்கு சொத்தில் முழு உரிமை உண்டு.
3. டல்ஹௌசியின் வரவுக்கு முன்பு வரை கம்பெனி அரசின் அனுமதியை எளிதாக பெற்று வந்தனர்.
4. டல்ஹௌசி ஆங்கில அரசின் பாதுகாப்பில் உள்ள அரசு, வாரிசு நியமனம் பெற அரசு அனுமதி அவசியம் என கூறினார். தத்தெடுக்க ஆங்கில அரசு மறுத்தால் அவ்வரசு (வாரிசு இல்லாத அரசு) ஆங்கில அரசுடன் இணைக்கப்படும் என்றார். இது வாரிசு இழப்புக் கொள்கை எனப்படும்.
5. வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின் கீழ் முதலில் வீழ்ந்த அரசு சதாரா ஆகும்.

41. *காரன்வாலிஸின் நீதித்துறைநிர்வாகம்* (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. சர் வில்லியம் ஜோன்ஸ் ஆலோசனையின் படி நீதித்துறையை காரன்வாலிஸ் சீரமைத்தார்.
2. ஆட்சியாளர்ளை (ஊழடடநஉவழசள) நீதித்துறை பொறுப்பிலிருந்து விடுவித்தார்.
3. குற்றவியல், உரிமையியல் நீதிமன்றங்களை முழுமையாக சீரமைத்தார்
4. நீதித்துறையின் உச்சங்களாக சதர் திவானி அதாலத்தும், சதர் நிசாமத் அதாலத்தும் திகழ்ந்தன.
5 நான்கு பிராந்திய முறையீட்டு நீதிமன்றங்கள் கல்கத்தா, தக்காணம், மூர்ஷிதாபாத், பாட்னா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன.

www.Padasalai.Net

42. சார்லஸ் உட் அறிக்கை (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. 1854 ஆம் ஆண்டு சார்லஸ் வுட் கல்வி அறிக்கை வெளியிடல்
2. ஆரம்பகல்வி முதல் உயர்நிலைப்பள்ளியையும், கல்லூரிப் படிப்பையும் உள்ளடங்கிய ஒரு விரிவான வரைவாகும்.
3. பொதுக் கல்வித்துறை துவங்கப்பட்டு மூன்று மாகாணத் தலைநகரங்களிலும் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.
4. இதன் தொடர்ச்சியாக 1857 ல் சென்னை பல்கலைக்கழகமும் பம்பாய், கல்கத்தா பல்கலைக்கழகங்களும் தோற்றவிக்கப்பட்டன.

43. பிண்டாரிகள் மற்றும் தக்கர்கள் (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

பிண்டாரிகள்:

1. பிண்டாரிகள் கொள்ளைக் கூட்டத்தில் இஸ்லாமியர், இந்துக்கள் என்ற இரு சமயத்தவர்களும் இருந்தனர்.
2. துணைப்படைத் திட்டத்தில் வேலையிழந்த படைவீரர்கள் இதில் பெருமளவில் சேர்ந்தனர்.
3. பிரிட்டிஷார் பிண்டாரிகள் மீது போர் பிரகடனம் செய்து அவர்களை ஒழித்தனர்.

தக்கர்கள்:

1. 14 ம் நூற்றாண்டில் தில்லிக்கும் ஆக்ராவுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் கொள்ளையடித்துக் கொண்டிருந்த கூட்டத்தினர்.
2. தக்கர்களை ஒடுக்க பெண்டிங் ஒரு திட்டம் வகுத்து அவர்களை அழிக்க வில்லியம் ஸ்லிமேனை நியமித்தார்.
3. 1860 ம் ஆண்டு வாக்கில் தக்கர்கள் பிரச்சினை முடிவுக்கு வந்தது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com


44. இந்திய கைத்தறி நெசவாளர்கள் மீது தொழிற்துறை புரட்சியின் தாக்கம்.

1. உலகின் துணி ஏற்றுமதியில் முதன்மை பெற்று விளங்கிய இந்தியா, லங்காஷ்யரின் (இங்கிலாந்து) பருத்தி ஆடை தேவைக்குச் சந்தையாக மாற்றப்பட்டது.
2. குறைந்த விலையில் இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட பிரிட்டிஷ் பொருட்கள் இந்திய சந்தைகளில் குவியலாயின.
3. நீண்ட கால பயன்பாட்டுக்கு உகந்தமையாக இருந்ததினாலும், சொற்ப விலைக்கு விற்கப்பட்டதாலும் இந்திய கைத்தறி பொருட்கள் உற்பத்தி நலிந்தது.

45. ஒப்பந்தக் கூலி முறை (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. இம்முறையில் தொழிலாளர்கள் ஐந்தாண்டு பணியமர்த்தப்பட்டனர்.
2. பயணச் செலவு வழங்கப்பட்டது.
3. இம்முறையின்படி கூலி (ஒப்பந்த தொழிலாளர்களை அழைக்கும் பெயர்) சிறைச் சாலை போன்ற சூழ்நிலையில் பணியாற்ற வேண்டிவந்தது.
4. பணியில் அலட்சியம் காட்டினலோ, அல்லது பணிசெய்ய மறுத்தாலோ மிடுக்காக திரிந்தாலோ, உத்தரவுக்கு கீழ்படிய மறுத்தாலோ, ஒப்பந்த காலம் முடியும் முன் பணியை விட்டு விலகினாலோ, கூலியை மறுக்கவோ அல்லது சிறைத்தண்டனை வழங்கவோ முடியும்.

46. ஆங்கிலேயருக்கும் ஹைதர் அலிக்கும் இடையே கையெழுத்தான மதராஸ் உடன்படிக்கைக்கான சூழ்நிலைகளை விளக்குக.

1. ஹைதர் முதலாம் மைசூர் போரில் ஆங்கில படையிடமிருந்த தமது மங்களூரை மீட்டேடுத்தார், பெங்களுரை தக்க வைத்தார்.
2. கேப்டன் நிக்சனை தோற்கடித்தார். கரூரையும் ஈரோட்டையும் கைப்பற்றினார். மதுரை, திருநெல்வேலியில் எந்த வித எதிர்ப்பும் இன்றி படை நடத்தி சென்றார்.
3. தஞ்சாவூருக்கும் கடலூருக்கும் முன்னேறிச் சென்றார். முதலாம் மைசூர் போர் ஹைதருக்கே சாதகமான சூழ்நிலை தென்பட்டது.
4. ஆங்கிலேயருடன் உடன்படிக்கைக்கு ஹைதர் விரும்பாவிட்டாலும் மராத்தியர் படையெடுத்து வரக்கூடும் என்ற அச்சுருத்தல் அவரை ஆங்கிலேயருடன் மதராஸ் உடன்படிக்கை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளியது.

47. 1801 ம் ஆண்டு கிளர்ச்சி பற்றி எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. திப்புவையும் கட்டபொம்மனையும் வென்ற பின் அங்கிலேயரின் கவனம் 1801 மே மாதம் இராமநாதபுரம், சிவகங்கை நோக்கி திரும்பின.
2. மருது பாண்டியன், மேலப்பன் ஆகியோா் இதற்கு தலைமை வகித்தனர்.
3. மருது சகோதரர்களுடன் ஊமைத்துரை செவத்தையாவும் இணைந்தனர்.
4. சிவகங்கைக்கு ஆங்கிலேயா் ஒய்யாத்தேவர் என்பவரை போட்டியாளராக நியமித்தனர்.
5. தளபதி அக்னி தலைமையிலான படை பெரும் சேதத்துடன் வெற்றி பெற்றது.
6. மருதுவை சிங்கபுணரியிலும், செவத்தையாவை வத்தலகுண்டுவிலும், வெள்ளை மருதுவின் மகன் துரைசாமியை மதுரையிலும் கைது செய்தனர்.
7. மருது சகோதரர்கள் திருபத்தூரிலும், ஊமைத்துரை, செவத்தையா பாஞ்சாலங்குறிச்சியிலும் கொல்லப்பட்டனர்.
8. 73 கிளர்சியாளர்கள் பினாங்குக்கு நாடு கடத்தப்பட்டனர்.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

48. 1806 ம் ஆண்டு வேலூர் புரட்சி பற்றி எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. அரியனையை இழந்த அரசர்கள், குருநில மன்னர்களின் சந்ததியினர், திப்பு மகன்களின் பிரதிநிதிகள், விசுவாசிகள் 1806 ல் வேலூரில் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சி செய்ததே வேலூர் கலகம் ஆகும்.
2. தலைப்பாகையுடன் கூடிய சீருடை அறிமுகம், காதணிகளை அணிவதும் சமயச் சின்னங்களை இட்டுக் கொள்வதும் தடை செய்யப்பட்டது. புரட்சியில் வீரர்கள் பங்கு பெற காரணமாயிற்று.
3. ஜுலை 10ம் நாள் விடியற்காலை முதல் மற்றும் 23ம் படைப்பிரிவைச் சேர்ந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தை தோற்றவித்தனர். கர்னல் பான்கோர்ட் மற்றும் கர்னல் மி கேரஸ் ஆகியோர் கொல்லப்பட்டனர்.
4. ராணிப் பேட்டையில் இருந்து வந்த கில்லேஸ்பி புரட்சியை அடக்கினார்.
5. சிலர் தூக்கிலிடப்பட்டனர். சிலர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இக்கலகம் ரத்தக்களரியில் முடிவடைந்தது
6. திப்புவின் மகன் கல்கத்தாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டார். படைத்தளபதியும், சென்னை ஆளுநரும் திருப்பியழைக்கப்பட்டனர்.

49. கோல் பழங்குடியினரின் ஏழுச்சியைப் பற்றி விளக்குக. (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. கோல்கள் பீகார், ஒரிசா, சோட்டா நாக்பூர், சிங்பூம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த பழங்குடியினர் ஆவர்.
2. சோட்டா நாக்பூர் ராஜா பல கிராமங்களைப் பழங்குடிகள் அல்லாதாருக்கு குத்தகைக்கு விட்டதே கோல்களின் கிளர்ச்சிக்கு காரணம்.
3. கொள்ளையடிப்பதும், சொத்துக்களுக்கு தீவைப்பதும் அவர்களது முக்கிய வழிமுறைகளாயிருந்தன. உயிர் சேதம் ஏற்படுத்ததுவதை நோக்கமாக கொண்டிருக்கவில்லை.
4. கோல் கிளர்ச்சிக்கு துண்டுகோலாய் இருந்தவர் பிந்த்ராய் மன்கி ஆவார். கோல் கிளர்ச்சியின் தலைவர் புத்தபகத் ஆவார்.
5. புத்தபகத் கொல்லப்பட்டதும், பிந்த்ராய் மன்கி சரணடைந்ததும் கோல்களின் போரட்டம் முடிவுக்கு வந்தது.

50. 1857 ஆண்டு புரட்சியின் விளைவுகள் யாவை? (ஏதேனும் மூன்று குறிப்புகள் போதும்)

1. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி முடிவுக்கு வந்தது.
2. இந்தியாவின் ஆட்சி அரசியின் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.
3. புதிய பகுதிகள் இணைக்கப்பட மாட்டாது. இந்திய அரசுகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவித்தனர்.
4. 1861 ல் அமைக்கப்படும் சட்டமன்றத்தில் இந்திய பிரதிநிதிகள் நியமிக்கப்படுவார்கள் எனக் கூறியது.
5. இந்திய தலைமை ஆளுநர் அரசப் பிரதிநிதி (வைஸ்ராய்) என அழைக்கப்பட்டார். (கானிங்பிரபு முதல் வைஸ்ராய்).

51. எம்.ஜி ரானடே

1. பிரார்த்தனை சமாஜத்தை வலுவூட்டினார். “தேசிய சமூக மாநாடு” என்ற அமைப்பை தோற்றவித்தார்.
2. விதவைகள் மறுமணச் சங்கம் மற்றும் தக்காணக் கல்விக் கழகம் போன்ற அமைப்புகளையும் தோற்றவித்தார்.
3. இவரது வழிகாட்டுதலில் பிரார்த்தனை சமாஜம் மேற்கு இந்தியப் பகுதிகளில் சமூக சீர்திருத்தங்களை செயலாக்கம் செய்தது.
4. தன்னலமற்ற சேவை செய்வதற்கான கல்வியை வலியுறுத்தினார்.

52. சுவாமி விவேகானந்தர்

1. நவீன இந்தியாவின் விடிவெள்ளி
2. அமெரிக்காவின் சிகாகோ மாநாட்டில் இந்து சமயத்தின் புகழை உலகம் அறியச் செய்தார்.
3. இவரது ஆதரவில் உருவான இயக்கங்கள் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், ஆதரவற்றோர்க்கான இல்லங்கள் ஆகியவற்றை உருவாக்கியதோடு இயற்கை பேரழிவு ஏற்படும் போது மக்களுக்கு ஆதரவுக் கரம் இன்றும் நீட்டுகிறது.

53. அகமதியா இயக்கம்

1. மிர்சா குலாம் அகமது என்பவரால் இவ்வியக்கம் உருவானது.
2. இவர் தன்னை தீர்க்கதரிசி என கூறினார்.
3. இஸ்லாமியர்களை குரானில் சொல்லப்பட்ட உண்மையான கொள்கைகளுக்கு திரும்ப வேண்டும் என அழைப்பு விடுத்தார்.
4. பிற மதப் பரப்பாளர்கள் வைத்த வாதங்களை இவர் எதிர்கொண்டார்.

54. சிங் சபா இயக்கம்

1. நவீன மேற்கத்திய கல்வியை சீக்கியருக்கு கிடைக்க நோக்கமாக கொண்டது.
2. கிறிஸ்தவ மதப்பரப்பாளர்கள் மற்றும் இந்து சமய மீட்டேடுப்பாளர்களின் நடவடிக்கைளை எதிர் கொண்டது.
3. அகாலி இயக்கம் இதன் கிளை இயக்கமாகும்.

www.Padasalai.Net

55. வைகுண்டசாமிகள்

1. சாமிதோபில் பிறந்த வைகுண்ட சாமிகளை பின்பற்றுவோர் “அய்யா வழி” வந்தவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.
2. இவருடைய “நிழல் தாங்கல்” வழிபாட்டுக் கூடங்கள் சாதி கட்டுபாடுகளை உடைத்தது.
3. இவரது சீடர்கள் தலைபாகை அணிந்தனர்.
4. 1851 ல் இவரது இறப்பிற்க்கு பின்னரும் தென் திருவாங்கூர் பகுதியில் கிறிஸ்தவ சமயம் பரவாமல் இருக்க ஜயா வழி பெரும் பங்காற்றிவருகிறது.

எனதருமை வரலாற்று மாணவர்களே அதிக மதிப்பெண் பெற்று வரலாற்றில் சாதனை படைக்க வாழ்த்தும்
உங்களவன்
சு. சண்முகசுந்தரம் முதுகலை ஆசிரியர் பாரதியார் வித்யாலயம் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி

## பதினொராம் வகுப்பு இரண்டாம் தொகுதி

## சு. சண்முகசுந்தரம் முதுகலை ஆசிரியர் பாரதியார் வித்யாலயம் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி

## இரண்டு மதிப்பெண் வினா விடை

### சுருக்கமான விடையளி (இரண்டு மதிப்பெண் வினா)

1. விஜய நகரைப் பற்றி அறிய உதவும் தொல்லியல் சான்றுகள் பற்றி விவரி

கோவில்கள், அரண்மனைகள், கோட்டைகள், மசூதிகள் மற்றும் நாணயச் சான்றுகள்.

2. விஜய நகர அரசு யாரல் ஏற்படுத்தப்பட்டது? எதனால் அப்பெயர் வந்தது.?

1336 ல் ஹரிஹரர் மற்றம் புக்கரால். துங்கபத்திரா நதிக்கரையில் அமைந்துள்ள விஜயநகரை(ஹம்பி) தலைநகராக கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதனால் அப்பெயர் வந்தது.

3. பாமினி விஜயநகர அரசுகளுக்கிடையே பகைமை ஏற்பட்டதற்கான மூன்ற முக்கியமான காரணங்கள் யாவை?

1.இடங்களை கைப்பற்றுதல். 2. கப்பம் வசூலித்தல். 3. குதிரை வணிகத்தின் மேலான கட்டுப்பாடு

4. தராப் பற்றி எழுதுக.

அலாவுதின் அசன் பாமன்ஷா நிர்வாக வசதிக்காக தன் ஆட்சிப்பகுதியை நான்கு பிரிவுகளாக (மாகாணங்களாக) பிரித்தார். அப்பகுதிகள் தராப்ஸ் எனப்பட்டன.

5. முதலாம் முகம்மது பற்றி நீங்கள் அறிந்தது என்ன?

1. பாமன் ஷாவிற்கு பின் ஆட்சிக்கு வந்த பாமினி அரசர்.

2. சிறந்த அரசு முறை நிர்வாகத்தை நடத்தினார். மராட்டியர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தார். எட்டு அமைச்சர்கள் கொண்ட குழுவை ஏற்படுத்தினார்.

6. பக்தி இயக்கத்திற்கு இராமானுஜர் ஆற்றிய சேவைகள் யாவை?

1. சமய சமத்துவத்திற்கு பெரும் ஆதரவாளராக திகழ்ந்தார்.
2. தத்துவ சித்தாந்தத்தை இயக்கமாக மறுவடிவம் பெறச் செய்தார்.

7. பக்தி இயக்கத்தில் ரவிதாஸின் பங்கினை பற்றி நீவிர் அறிவன யாவை?

1. கவிஞர், துறவி, தோல்பதனிடும் குடும்பத்திலிருந்து வந்தவர்
2. வட இந்தியாவில் (பஞ்சாப், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், மத்தியபிரதேசம்) மக்கள் குருவாக மதித்தனர்.
3. சீக்கிய மதபாடல்களில் இவரின் பாடல்கள் இடம் பெற்றுள்ளது.
4. சாதி, சமூக பிரிவுகள் பாலின வேறுபாட்டை எதிர்த்தார். சமத்துவத்திற்கு ஆதரவளித்தார்.

www.Padasalai.Net

8. இராமானந்தரின் போதனைகள் யாவை?

1. இராமானுஜரின் கொள்கையை ஏற்று கடவுளின் முன் அனைவரும் சமம் என போதித்தார்.
2. சாதி முறையை நிராகரித்தார்
3. வைணவத்தில் முற்போக்கான மாற்றங்களை ஏற்படுத்தினார்.

9. பண்பாட்டு பாரம்பரியத்தின் சிறப்பிற்கு காரணமான மீராபாயின் பாடல்களும் கவிதைகளும் அமைந்தன விளக்குக.

1. அன்பே கடவுள் என்ற பஜனை பாடல்களை பாடினார்.
2. அனைவருக்கும் (சாதி, பாலினம், அந்தஸ்து வித்தியாசம் இன்றி) கடவுள் கிருஷ்ணரின் அருள் உண்டு என்றார்.
3. இவரது இசைபாடல்கள் வளமான பண்பாட்டு மரபாகும்.
4. ஒவ்வொரு இல்லத்திலும் இவரது பாடல் ஒலித்தது.

10. இந்து துறவிகள் இஸ்லாமின் மீது கொண்டிருந்த இரண்டு வெவ்வேறு அனுகுமுறைகள் யாவை?
1. பன்முக தன்மை, புதியசவால்களை எதிர்கொள்ளக்கூடியதாக இருந்தது.
2. இந்து மதத்தில் சீர்திருத்தம் செய்து ஒருமைப்பாட்டை வளர்க்கும் இயக்கமாக்கி அதன் தலைவர்களாகவும் மாறினர்

11. பாபர் இந்தியாவின் மீது படையெடுக்க தூண்டியது எது? (ஏதேனும் இரண்டு குறிப்புகள் போதும்)

1 மத்திய ஆசியாவில் ஏற்பட்ட மேலாதிக்க போட்டி வாய்ப்பு தேடி இந்தியா செல்ல வைத்தது.
2 பட்டு பாதை வழியாக இந்தியாவுடன் மத்திய ஆசியா செய்த வர்த்தகம்
3 தைமூர் செய்ததை மீண்டும் செய்ய வேண்டும் என்ற கனவு
4 தௌலத்கான் லோடி, ராணாசங்கா அழைப்பு

www.Padasalai.Net

12. அக்பர் பைராம்கானை எவ்வாறு கையாண்டார்?

1 அக்பர் தனது முதல் நான்காண்டு ஆட்சியில் பைராம் கான் உதவியுடன் பேரரசை விரிவு படுத்த பைராம்கானை பயன்படுத்திக் கொண்டார்.
2 கருத்து வேறுபாடு மற்றும் சூழ்நிலை காரணமாக பைராம்கானை பணிநீக்கம் செய்தார்.
3 மெக்கா செல்ல ஆணையிட்டார். செல்லும் வழியில் ஆப்கானியன் ஒருவனால் கொல்லப்பட்டார்.

13. சிறு குறிப்பு வரைக. அ) வில்லியம் ஹாக்கின்ஸ் ஆ) சர் தாமஸ் ரோ

1 ஜஹாங்கீர் ஆட்சிகாலத்தில் வில்லியம் ஹாக்கின்ஸ் மற்றும் சர் தாமஸ் ரோ என்ற இரு ஆங்கிலேயர்கள் வருகை தந்தனர்.
2 இந்தியாவில் ஆங்கிலேய வணிக குடியேற்றம் ஒன்றை நிறுவுவதற்கு பேரரசின் அனுமதியை வில்லயம் ஹாக்கின்ஸால் பெற முடிய வில்லை.
3 இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ்ஸின் தூதுவரான சர்தாமஸ் ரோ சூரத் நகரில் ஒரு வணிக குடியேற்றம் அமைக்க அனுமதியை பெற்றார்.

**14.** “ஜஹாங்கீரின் அரியணைக்குப் பின்னால் அதிகார மையமாகக் செயல்பட்டவர் நூர்ஜஹான்” விளக்குக.

1 ஜஹாங்கீர் அரச விசயங்களில் அதிக நாட்டம் காட்டாததால் நூர்ஜஹான் அரியனையின் பின்னே உண்மையான அதிகாரம் கொண்டவராய் திகழ்ந்தார்.
2 இளவரசர் குர்ரம் மற்றும் தளபதி மகபத்கானை ஒரம் கட்டினார்.
3 ஜஹாங்கீர் இறந்த உடன் தனது மருமகன் ஷாரியாரை அரியனை ஏற்ற முயன்றார்.

15. முகலாயக் கட்டடக் கலையின் மறுவடிவமாகக் கருதப்படுவது எது? அதன் வடிவமைப்பை விவரிக்கவும்.

1. தாஜ்மஹால்.
2. இவ்வளாகம் தலைவாயில், தோட்டம், மசூதி, கல்லறைமாடம் மற்றும் நான்கு கோபுரம் (மினார்) உடையது.

16. ஔரங்கசீப்பிற்கு எதிராக வடபகுதியில் மூண்ட மூன்று எழுச்சிகள் யாவை?

1 1649ல் மதுராவில் நடைபெற்ற ஜாட்டுகளின் கிளர்ச்சி
2 ஹரியானாவின் சத்னாமியர் கிளர்ச்சி
3 சீக்கியர் கலகம்

17. சிறு குறிப்பு வரைக- i) சிக்கிய மதம் ii) சூபியிஸம்

சிக்கிய மதம்:

1 ஒரு கடவுள் கோட்பாட்டை முன்னேடுத்த இயக்கம்.
2 புனித நூல் குரு கிரந்த சாகிப்
3 கடவுள் ஒருவரே என குருநானக் நம்பினார்.

சூபியிசம்:

1 இஸ்லாமின் உள்ளுணர்வு சார்ந்த இறைநிலை இணைப்பினை முன்வைக்கும் ஒரு மதக் கோட்பாடு.
2 ஈரானில் உதயமானது இந்தியாவில் செழித்து வளர்ந்தது.

www.Padasalai.Net

18. மக்களிடையே பக்தி இயக்கத் துறவிகள் எவ்வாறு புகழ் பெற்றனர்?

1 கவிஞராகவும் இறையடியாராகவும் இருந்து பிராந்திய மொழியில் பக்தியை பரப்பினர்.
2 சடங்குகளையும் சாதி முறையையும் சாடினர். சமூகத்தின் அனைத்து தரப்பிலிருந்தும் தோன்றினர்.

19. முகலாயர் காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி பற்றி எழுதுக

1. குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், நிதிநெறி விளக்கம் ஆகிய இலக்கியங்களை இயற்றினார்
2. தாயுமானவர் சமரச சன்மார்க்கம் என்ற பக்தி பாடலை இயற்றினார்.

**20.** "முகலாயர் ஓவியத்துறையில் உலகலாவிய அங்கீகாரம் பெற்றிருந்தனர்" விவரிக்க

1 இவர்களது நூண் ஓவியங்கள் உலகத்தின் பல அருங்காட்சியங்களில் முக்கிய இடம் வகிக்கின்றது.
2 பாரசீக மொழியில் எழுதப்பட்ட மகாபாரதத்திலும் அய்னி அக்பரியிலும் பல ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.
3 முகலாய நூண் ஓவியங்கள் டச்சு ஓவியர் ரெம்பிராண்டை கவர்ந்தது.

**21.** சிவாஜிக்கும் அப்சல்கானுக்கும் இடையே நடைபெற்ற பூசலைப் பற்றி எழுதுக

1 பிஜப்பூர் சுல்தான் மராத்தியர் ஆபத்து நீங்கியதால் சிவாஜியை அடக்க அப்சல்கானை அனுப்பினார்.
2 ஆப்சல்கானால் சிவாஜியை மலைப்பகுதிகளில் வீழ்த்த முடியவில்லை
3 சூழ்ச்சி செய்து சிவாஜியை வீழ்த்த நினைத்து அதில் அப்சல்கான் தோல்வி அடைந்தார்.

22. புரந்தர் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் யாவை?

1. சிவாஜி தான் கைப்பற்றிய கோட்டைகளை வைத்துக் கொள்ள அனுமதி
2. பிஜப்பூரை கைபற்ற முகலாயர்களுக்கு சிவாஜி மான்சப்தாராக உதவி செய்ய ஒப்புதல்

23 தாராபாய் பற்றி சிறு குறிப்பு வரைக

1 சிவாஜியின் மகன் ராஜாராமின் மனைவி
2 கோல்ஹாபுரை தலைநகராக கொண்டு மாற்று அரசாங்கம் நடத்தினார்.

24 சிறு குறிப்ப வரைக. அ) சௌத் ஆ) சர்தேஷ்முகி

1. சௌத், சர்தேஷ்முகி என்ற வரிகள் மராட்டியர் அல்லாத அதாவது முகலாய மற்றும் தக்காண சுல்தான் பகுதிகளில் மராட்டியர்களால் வசூலிக்கப்பட்ட வரிகள் ஆகும்.
2. சவுத் என்பது மராட்டிய படையெடுப்பிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள அம்மக்கள் செலுத்திய வரி (நிலவரியில் நான்கில் ஒரு பங்கு) ஆகும்.
3. சர்தேஷ் முக் (பிரதம தளபதி) என்ற தகுதியின் காரணமாக பெறப்பட்டது.

25. பேசின் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் யாவை?

1 1802 ல் கையெழுத்தான துணைப்படை திட்ட ஓப்பந்தம் ஆகும்.
2 அதிக வருமானம் ஈட்டக்கூடிய பகுதிகள் ஆங்கிலேயரிடம் கொடுக்கப்பட்டது.
3 மராட்டியர் ஆங்கிலேயரின் மேலாண்மையை ஏற்றது. மராட்டிய பேரரசு கனவு தகர்ந்தது.

www.Padasalai.Net

26 மராத்தியரின் இராணுவ வலிமைக்கும் கடைசி கட்டமாக இருந்தது எது?

1 உத்திர் போர்
2 1760 ல் சதாசிவராவ் தலைமையில் சென்ற இராணுவம் உத்திர் போரில் எதிரிகளை வீழ்த்தியது.
3 இதுவே மராத்தியரின் இராணுவ வலிமையை நிருபித்த கடைசி போரானது.

27 ஆங்கிலேயருக்கும் பேஷ்வாவுக்கும் இடையே 1817 இல் கையெழுத்தான பூனா உடன்படிக்கை பற்றி எழுதுக.

1 மராத்திய கூட்டமைப்பின் தலைமையிலிருந்து பேஷ்வா நீக்கம்.
2 கொங்கனப் பகுதியை ஆங்கிலேயர் பெற்றனர்.
3 பரோடா ஆட்சியாளர் கெய்க்வாடின் சுதந்திரம் அங்கிகரிக்கப்பட்டது.

28. சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி ஒரு குறிப்பு வரைக.

1 நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டது
2 இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவுட்டப்பட்டது.
3 பல அறிய நூலகள், ஆவணங்கள் இரண்டாம் சரபோஜியால் வளம் சேர்க்கப்பட்டது.

29. இரண்டாம் சரபோஜி சமய பரப்புகுழு மற்றும் காலனி ஆதிக்க அரசுக்கு எவ்வாறு முன்னோடியாக திகழ்ந்தார்?

1 தஞ்சாவூரில் கிறிஸ்தவர் அல்லாத உள்ளூர் குழந்தைகளுக்காக நவீன பொதுப் பள்ளிகளை முதன் முதலாக தொடங்கினார்.
2 ஆதரவற்றவர்கள் மற்றம் ஏழை மாணவர்களுக்காக தஞ்சை மற்றம் இதர இடங்களில் இலவச தொடக்க மற்றும் உயர் கல்வி நிலையங்களை நிறுவி நிர்வகித்தார்.
3 நவீன கல்வி முறைக்காக 'நவ வித்யா' என்ற முறையை மேற்படி பள்ளிகளில் அறிமுகம் செய்தார்.

30. கனோஜி ஆங்கிரே பற்றி நீ அறிந்தவற்றைப் பற்றி எழுதுக.

1 இந்தியாவின் மேற்கு கடற்கரைப் பகுதியில் அதிக அதிகாரம் படைத்த கடற்படை தளபதியாக இருந்தவர்.
2 உள் நாட்டு போரில் தாராபாய்க்கு ஆதரவு நிலைபாட்டை எடுத்திருந்தார்.
3 அவரிடம் பேஷ்வா பாலாஜி விஸ்வநாத் ஐரோப்பிய ஆபத்து பற்றி எடுத்துரைத்து மன்னர் சாஹுவிடம் தமக்குள்ள விசுவாசத்தை உறுதிசெய்தார்

31. நாயக்க அரசுகள் யாவை? அவை நிறுவப்படகாரணம் என்ன?
1. விஜயநகர பேரரசு ஆட்சியில் தமிழகப் பகுதியில் மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட அரசுகள் நாயக்க அரசுகள் என்றழைக்கப்பட்டது.
2. நாயக்க அரசுகள் நிறுவப்பட்டதன் நோக்கமே அரசுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்களையும் பெருக்குவதும், மனித ஆற்றலை (இராணுவ வீரர்களை) திரட்டுவதுமேயாகும்.

www.Padasalai.Net

32. ஆங்கிலேயர் மதராஸில் தங்களது குடியேற்றத்தை எவ்வாறு நிறுவினர்?
1. தமர்லா வேங்கடாத்திரி நாயக்கர் என்பவரிடமிருந்து பெற்ற நிலத்தில் 1639ல் புனித ஜார்ஜ் கோட்டையை கட்டினர்.
2. சந்திர கிரியின் அரசர் கோட்டை கட்டிக் கொள்ள அனுமதி வழங்கினார்.
3. 1684 ல் ஒரு மாகாணமாக உருவானது. 1693 இல் சென்னையை சுற்றியுள்ள மூன்ற கிராமங்களை வாங்கினர்.
4. 1702 ல் மேலும் ஐந்து கிராமங்களை வாங்கினர்.

.

33. கைவினைப் பொருள்கள் உற்பத்தி பற்றி ஒரு குறிப்பு வரைக..
1. கைவினைப் பொருளுற்பத்தி நகர்புறம் மற்றும் கிராமப்புரம் ஆகிய இரண்டிலும் நடைபெற்றது.
2. உலோக வேலைகள் நகரத்திலும், நெசவுத் தொழில் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டது
3. வேதியியல் பொருட்களை பயன்படுத்தி நிரந்தர வண்ணங்களைத் உருவாக்குவதில் நிபுணத்துவத்துவம் பெற்றிருந்தனர்.
4. சோழ மண்டலம் "கலம்காரி" எனப்படும் வண்ணம் பூசப்பட்ட துணிவகைக்குப் பெயர் பெற்றது.
5. இவ்வகை துணிகளில் அலங்காரம் மற்றும் வடிவங்கள் முதலில் வரையப்பட்டு பின்னர் சாயம் ஏற்றப்பட்டது.
6. தென் கிழக்காசியாவில் குறிப்பாக இந்தோனிசியத் தீவுமக்களால் இத்துணிகள் விரும்பி வாங்கப்பட்டது.

**34. "சராப்" மற்றும் "உண்டியல்" பற்றி நீ அறிவன யாவை?**

சராப்:

1. சராப் எனப்பட்டோர் நாணயங்களின் தூய்மை நிலையை பரிசோதித்தனர். அவற்றின் மதிப்பை அன்றைய அளவில் மதிப்பிடடனர். பணமாகவும் மாற்றித்தந்தனர்.

2. இவர்கள் உள்ளூர் வங்கியாளர்களாக செயல்பட்டனர்.

உண்டியல்:

1. வணிகர்கள் பணத்தை ஓரிடம் விட்டு மற்றொரு இடத்திற்குப் பணத்தை ரொக்கமாக அனுப்புவதற்குப் பதிலாக பணமாற்ற முறிகளை **(Bills of Exchange)** வழங்கினர்.

2. 'சராப்' களால் இவ்வகை உண்டிகள் **(Bills of Exchange)** பல்வேறு இடங்களில் குறிப்பிட் தள்ளுபடியோடு பணமாக மாற்றிக் கொடுக்கப்பட்டது.

**35. இந்தியாவின் முதல் போர்த்துகீசிய ஆளுநர் யார்? அவர் அறிமுகப்படுத்திய கொள்கையை விளக்குக**

1. இந்தியாவின் முதல் போர்த்துகீசிய ஆளுநர் பிரான்ஸிஸ்கோ டி அல்மெய்டா ஆவார்
2. குடியிருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் கப்பல்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி கடற்படையை வலுபடுத்தும் "நில நீர்க் கொள்கையை" அவர் அறிமுகப்படுத்தினார்.

**36. "கார்டஸ் (Cartaz) முறை" என்றால் என்ன?**

1. கடற்கொள்ளையில் இருந்து வணிகர்களை பாதுகாப்பதாக போர்த்துகீசியர் கூறிக் கொண்டனர்.
2. இதற்காக வணிகர்களிடம் கார்டஸ் **(cartaz)** என்ற பெயரில் பணம் பறித்தனர்.
3. கார்ட்ஸ் என்ற பெயரில் போர்த்துக்கிசியர் வழங்கும் பாதுகாப்பை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள கட்டாயப்படுத்தினர். இல்லையெனில் வன்முறை மூலம் வணிகத்திற்று இடையூறு செய்யப் போவதாக பயமுறுத்தினர்.
4. கடற்கொள்ளை இடையூறுளில் பலவற்றை செய்தவர்கள் போர்த்துசீசிய கடற்கொள்ளையரே.

www.Padasalai.Net

**37. இந்தியாவில் டச்சுக்காரரின் காலனியாதிக்கக் கோட்டைகளையும் குடியேற்றங்களின் பெயர்களையும் குறிப்பிடுக.**

1. டச்சுக்காரர்களின் குடியேற்றங்கள் : மசூலிப்பட்டிணம், பழவேற்காடு

2. டச்சுக்கரார்களின் காலனியாதிக்க கோட்டைகள்: நாகப்பட்டிணம், நாகர்கோவில், புன்னைக்காயல், பரங்கிப்பேட்டை கடலூர், தேவனாம்பட்டிணம்

**38. "வணிக நிறுவனம்" (factory) என்றால் என்ன? 16ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட ஐரோப்பிய வணிக நிறுவனங்கள் யாவை?**

1. நிறுவனம் **(factory)** என்பது அயல் நாடுகளிலுள்ள தங்கள் முதலாளிகளுக்காக வணிக முகவர்கள் தங்கியிருந்து வணிக நடவடிக்கைகளை மேற் கொள்ளும் இடமாகும்.
2. 16 ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட ஐரோபிபய நிறுவனங்கள்:
   1. பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி 2 டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி
   3. டேனியக் கிழக்கிந்தியக் கம்பெனி 4. ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி

**39. முதலாம் கர்நாடகப் போருக்கான கராணங்கள் யாவை?**

1. ஐரோப்பாவில் நடை பெற்று ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர்.

**2.** இந்தியாவில் பிரான்சு மற்றம் ஆங்கிலேயரிடையே ஏற்பட்ட வணிகப் போட்டி

40. 1765 இல் கையெழுத்தான உடன்படிக்கையின் பெயர் என்ன? அதன் கூறுகள் யாவை?

1. 1765ல் கையெழுத்தான உடன்படிக்கை அலகாபாத் உடன்படிக்கை ஆகும்.
2. இவ் உடன்படிக்கை ஆங்கிலேயருக்கும் இரண்டாம் ஷா ஆலமுக்கும் இடையில் ஏற்பட்டது.
3. வணிகக் குழு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளின் நிலவரி வசூலிக்கும் உரிமை பெற்றது.
4. பர்த்தவான், மிட்னாபூர், சிட்டகாங் மாவட்டங்களோடு கல்கத்தாவின் மீதான இறையாண்மையையும் பெற்றனர்.
5. ஆங்கிலேயர் வங்காளத்தின் ஆட்சியாளராக மாறினர்.

41. 1773 அம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டத்தை விவரி.

1. வங்காளத்தின் ஆளுநராக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலானார். (தலைமை ஆளுநரானார்).
2. கவர்னர் ஜெனரல் இயக்குநர் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.
3. வணிக குழுவின் வரவு செலவு கணக்கு பிரிட்டிஷ் கருவூலத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.
4. ஆளுநர், தலைமைதளபதி மற்றும் இரு ஆலோசகர்களைக் கொண்ட குழு வருவாய் வாரியமாக செயல்பட்டது.

42 ஆளுநர் தாமஸ் மன்றோ பற்றிச் சிறு குறிப்பு வரைக.

1. 1820 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்திற்கு ஆளுநராக பொறுப்பேற்றார்.
2. 1822 ம் ஆண்டு சென்னையில் இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தினார்.
3. ஆளுநராக இருந்த போது கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார்

www.Padasalai.Net

43. மாகாணம் மற்றும் மாநிலம் வேறுபடுத்துக:

1. கிழக்கிந்திய கம்பெனியாரின் தலைமை நிர்வாக அதிகாரியின் அலுவலுகம் அமையப் பெற்ற இடம் மாகாணம் ஆகும்.
2. அவ்வகையில் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகியவை மாகாணங்கள் ஆகும்
3. பின்னர் இம் மாகாணங்களை நிர்வகிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டதால் மத்திய மாநிலம், ஒருங்கிணைந்த மாநிலம், போன்ற பிராந்தியங்கள் உருவாக்கப்பட்டன.

44. இந்தியக் குடிமைப் பணிக்கு காரன்வாலிசின் பங்களிப்பிணைப் பற்றிக் கூறுக.

1. காரன் வாலிஸின் தலையாய பங்களிப்பு குடிமைப் பணிகளின் சீர்திருத்தமே ஆகும்.
2. அவர் திறமை வாய்ந்தவர்களையும், நேர்மையானவர்களையும் பணியமர்த்த வழி வகை செய்தார்.
3. கம்பெனி அதிகாரிகளுக்கு குறைந்த சம்பளம் வழங்கிவிட்டு அவர்களை தனியாக வியாபாரம் செய்ய அனுமதித்த பழைய நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.
4. கல்கத்தாவில் 1800 ல் ஒரு கல்லூரி வணிககுழுவின் குடிமைப் பணியாளர்களுக்காக துவங்கப்பட்டது.

45. ஆங்கிலேய ஆட்சியின் கீழ் நீர்பாசன முறையின் வளர்ச்சி குறித்து எழுதுக.

1. பாசன வசதி ஏற்படுத்திக் கொடுப்பதை பிரிட்டிஷ் அரசு புறக்கணித்தது.
2. ஆர்தர் காட்டன் என்ற பொறியியல் அலுவலர் ஒருவரின் தனிபட்ட ஆர்வத்தால் சிற்சில பாசன வேலைகள் நடந்தேறின.
3. கொள்ளிடத்தின் குறுக்கே 1836 இல் அணையைக் கட்டினார்.
4. பிரிட்டிஷ் அரசின் நேரடிக் கட்டுபாட்டுக்குள் இந்தியா செல்வதற்கு முன்பாக பாசன வசதி மேம்பாட்டில்நடைபெற்ற பணிகள்
   1. வட இந்தியாவில் 1830 ல் யமுனா கால்வாய்.
   2. 1857 ல் கங்கைக் கால்வாயை 450 மைல்கள் வரை நீட்டித்த பணி.
   3. 1856 இல் பஞ்சாப் பகுதியில் அமைந்த பாரி இடைத்துறைக் கால்வாய் தோண்டும் பணி.

46.டாக்காவின் மஸ்லின் துணி பற்றி ஓர் சிறு குறிப்பு வரைக.

1. வங்காளத்தில் முன்பு விளைந்த ஒரு வகை பட்டு போன்ற பருத்தியிலிருந்து துணி நெய்வார்கள்.
2. இந்த மெல்லிய துணி டாக்கா மஸ்லின் என்றழைக்கப்பட்டது.
3. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்திய நெசவுக்கு ஆதரவளிக்காததால் அதை பார்ப்பதே அரிதாகிவிட்டது.
4. இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்பட்ட நகரம் வருமை சூழ்ந்து நெசவாளர்கள் பசியால் செத்து மடிந்தார்கள்.

47. “செல்வவளங்கள் நாட்டை விட்டு வெளியேறியது இந்தியாவை ஏழ்மையாக்கியது”– எவ்வாறு ?

1. இந்தியாவிலிருந்து பெருந்தொகை உள்நாட்டின் செலவுக் கட்டணம் என்ற வகையில் இங்கிலாந்து போய் சேர்ந்தது.
2. கம்பெனியின் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட இலாபம், ஐரோப்பிய அதிகாரிகள், ஐரோப்பிய வியாபாரிகள், தோட்ட முதலாளிகள் இராணுவம், குடிமைப்பணி அலுவலர்கள் போன்றோரின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய தொகை
3. இந்தியாவில் நிகழ்ந்த போர்களுக்கான செலவுகள், போர் நடத்துவதற்க்காக வங்கியில் பெற்ற கடனுக்கான வட்டி மற்றும் இருப்புப்பாதை அமைக்க ஏற்பட்ட செலவுகள்
4. விக்டோரியா மகாராணி ஆட்சிகாலத்தின் கடைசி பத்து ஆண்டுகளில் (1891 – 1901) மொத்த வருவாயில் 24 சதவிதம் 159 மில்லியன் பவுண்ட்கள் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டது.

www.Padasalai.Net

48. திப்பு சுல்தான் மீது சுமத்தப்பட்ட ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கையின் (1792) அவமானகரமான விதிமுறைகளை பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

1. திப்பு அவருடைய ஆட்சிப்பகுதிகளில் பாதி இடங்களை ஆங்கிலேயருக்குக் கொடுக்க வேண்டும்.
2. போர் இழப்பீடாக மூன்று கோடி ரூபாய் அளிக்க வேண்டும். அதுவரை அவருடைய மகன்களில் இருவரைப் பிணைக் கைதிகளாக அனுப்பி வைக்க வேண்டும்.
3. திப்பு குடகுப் பகுதியை இழந்தார்.
4. திப்புவின் அதிகாரம் பெருமளவுக்கு குறைக்கப்பட்டது.

49. வராகன் (பக்கோடா) என்றால் என்ன?

1. விஜயநகரத்தில் அறிமுகமான தங்க நாணயம் பகோடா எனப்பட்டது.
2. ஐரோப்பிய வணிகர்கள் இந்தியாவுக்கு வந்த காலகட்டத்தில் இப்பணம் செல்வாக்கு பெற்று விளங்கியது.
3. திப்பு சுல்தான் ஆட்சியில் மைசூரில் ஒரு பகோடா மூன்றரை ரூபாய்க்குச் சமமாகக் கொள்ளப்பட்டது.

50. கொங்குப் பகுதியில் தீரன் சின்னமலையின் கிளர்ச்சிகள் பற்றி நீவிர் அறிவது யாது?

1. சின்னமலை கோயம்புத்தூரில் இருந்த ஆங்கிலேயரின் கோட்டை மீது தாக்குதல் நடத்தினார்.
2. 1801 ல் காவிரிக் கரையில் நடந்த போர்.
3. 1802 ஆம் ஆண்டு ஓடநிலையில் நடந்த போர்.
4. 1804 ஆம் ஆண்டு நடந்த அரச்சலூர் போர்.
5. இறுதிப் போர் 1805 ல் நடைபெற்றது. இப்போரில் சின்னமலை அவருடைய சமையல்காரரின் துரோகத்தால் சிவகரி கோட்டையில் தூக்கிலடப்பட்டார்.

51. 'சாயில் ரகப்' பற்றி விளக்கு.

1. சாயில் ரகப் என்னுமிடத்தில் முண்டா சமுகத்தை சார்ந்த பெண்கள் கண்மூடித்தனமாக படுகொலை செய்யப்பட்டனர்.
2. முண்டாக்கள் என்பவர்கள் பீகார் பழங்குடி மக்கள் ஆவர்.
3. இவர்களது நிலத்தை ஆங்கிலேயரின் அட்சியில் பொது நில உரிமை மூலம் ஜாகீர்தார்கள், பெரும் விவசாயிகள் வட்டிக்கடைக்காரர்கள் பறித்துக் கொண்டனர்.
4. எனவே முண்டாக்கள் பிர்சா முண்டா என்பவரது தலைமையில் தங்கள் நிலங்கைள மீட்க ஆங்கிலேயருக்கு எதிராக (1899-1900 அண்டுகளில்) கிளர்ச்சி செய்தனர்.
5. சாயில் ரகப் படுகொலைக்குப் பிறகும் முண்டா பெண்கள் ஆங்கிலேயருக்கு எதிராக பிர்சா முண்டா தலைமையில் போராடினர்.
6. ராஞ்சி சிறையில் அடைக்கப்பட் பிர்சா முண்டா 1900 ஆண்டில் தியாகியானார்.

52. கான்பூர் படுகொலை

1. நானாசாகிப் கான்பூர் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கினார்.
2. 125 ஆங்கிலேயர்கள் (பெண்கள் குழந்தைகள் உட்பட) கொல்லப்பட்டனர்.
3. அவர்களது உடல்கள் ஒரு கிணற்றுக்குள் வீசப்பட்டது.
4. இந்நிகழ்ச்சி கான்பூர் படுகொலை என அழைக்கப்பட்டது.
5. படுகொலைக்கு மறுநாள் படையெடுத்து வந்த ஹென்றி ஹேவ்லக் நானாசாகிப்பை தோற்கடித்தார்.
6. படுகொலைக்கு காரணமானவர்கள் என கருதப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டனர்.

53. சமூக சீர்திருத்தத்திற்கு இராஜா ராம் மோகன் ராயின் பங்களிப்பு என்ன?

1. பல தெய்வ வழிபாடு, உருவ வழிபாடு போன்றவற்றை எதிர்த்தார்.
2. சாதி முறை, மூட நம்பிக்கை, குழந்தை திருமணம், பர்தா முறை, உடன்கட்டை ஏறுதல் ஆகியவற்றை சாடினார்.
3. கைம்பெண் மறுமணத்தை ஆதரித்தார்.

54. சமூக நீதிக்கு ஜோதிபாபூலேயின் பங்கு என்ன?

1. சத்ய ஜோதக் சமாஜம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார்.
2. மேல் ஜாதியினரின் அடக்குமுறைக்கு எதிராக பிராமணர் அல்லாத மக்களின் உணர்வுகளை தட்டி எழுப்பி அவர்களுக்காக போராடினார்.
3. கல்வி கற்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

55. சுத்தி (சுத்திகரிப்பு) இயக்கம் ஏன் ஒரு மீட்டெடுப்பு இயக்கமாக கருதப்படுகிறது?

1. இந்துக்கள் அல்லாதாரையும் இந்துக்களாக மாற்றினர்.
2. ஆங்கிலோ வேதப்பள்ளிகள், கல்லூரிகள் நிறுவப்பட்டது.
3. "வேதங்களை நோக்கிச் திரும்புக" என சுவாமி தயானந்தர் அழைப்பு விடுத்தது.

56. ஸ்ரீ நாராயணகுருவின் தர்ம பரிபாலன இயக்கத்தின் பங்களிப்பை எழுதுக.

1. ஈழ சமுதாய மக்களுக்காக ஸ்ரீ நாராயனகுரு தர்ம பரிபாலன இயக்கம் மூலம் போராடினார்.
2. பொதுப் பள்ளி, அரசு பணிகளில் சேர, பொது சாலையை பயன்படுத்த, கோவில்களுக்குள் நுழைய, அரசியலில் பிரதிநிதித்துவம் பெற இவ்வியக்கம் பாடுபட்டது.
3. கேரள சமூகத்தை ஜனநாயக படுத்த தலைவர்களை இவ்வியக்கம் தந்தது.

57. இராமலிங்க அடிகளார் பற்றி நீவீர் அறிவன யாவை?

1. சிதம்பரத்தில் பிறந்த இராமலிங்க அடிகள் "சத்ய தர்ம சாலையை" வடலூரில் நிறுவினார்.
2. சாதி சமய வேறுபாடின்றி அனைவருக்கும் சமபந்தி விருந்தளித்தார்.
3. மக்களை கவர்ந்த, நெஞ்சை உருக்கும் இவரது பாடல்கள் "திருவருட்பா" என்ற பெயரில் இவரது சீடர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

---

எனதருமை வரலாற்று மாணவர்களே அதிக மதிப்பெண் பெற்று வரலாற்றில் சாதனை படைக்க வாழ்த்தும்

உங்களவன்

சு. சண்முகசுந்தரம் முதுகலை ஆசிரியர் பாரதியார் வித்யாலயம் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

www.Padasalai.Net